**பாதுகாவலன்**
**PATHUKAVALAN**

பாதுகாவலன்
தனிப்பிரதி ரூபா 1-50
தபால் மூலம் தனிப்பிரதி
ஆண்டு சந்தா ரூபா 100/-
தினமும வாசகர்கள் பெருகிக்கொண்டு இருக்கிறார்கள். இவ்வாரம் 6185 பத்திரிகைகள் அச்சிடப்பட்டுள்ளன. இன்னமும் முன்னேற இடமுண்டு. எனவே வாசகர்களை ஊக்குவியுங்கள்.
அ. பெ. இல. 2,
யாழ்ப்பாணம்

மலர்: 115 இதழ்: 14 7-4-1989 (ஏப்ரல் 7 — ஏப்ரல் 14) ரூபா 1-50 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

**மறைக்கல்விப் போதனைக்கு முன்னுரிமைகொடுத்து, மாநகரசபை ரூபா 1,10,000/-ஐ, பௌத்தம் இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய நான்கு மறைகளுக்கும் விகிதாசார முறையில் பகிர்வு:**

# நீர்கொழும்பு மாநகர சபை

# மறைக்கல்விக்கு நிதி உதவி

**ஞாயிறு மறைக்கல்வி வகுப்புகளை ஊக்குவிக்கும் நீர்கொழும்பு மாநகர சபையானது பௌத்த, இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மறைகளைச் சார்ந்த மதப் பிரமுகர்களுக்கு நிதி உதவி அளித்து நல்ல பிரசைகளை உருவாக்க முயலுகிறது. மறைக்கல்விச் செலவுக்கென கத்தோலிக்க திருச்சபைக்கு ரூபா 76,610/- வழங்கப்பட்டுள்ளது.**

எல்லா மதத்தவர்களுக்கும் மறைப்போதகத்தை ஊக்குவித்து, சிறுவர்களுக்கு மறையறிவை ஊட்ட முயன்றுவரும் நீர்கொழும்பு மாநகரசபை வரலாறு படைத்துள்ளது. இலங்கையில் முதல் தடவையாக மாநகரசபை, மறைக்கல்வியில் அக்கறை காட்டியுள்ளது.

நீர்கொழும்பு மாநகர முதல்வர் திரு. சரத்சந்திர குணரத்தினவின் விருப்பத்தை அனைத்து மாநகரசபை உறுப்பினர்களும் ஏக மனதாக ஏற்றுக் கொண்டதால் அங்குள்ள 35 பாடசாலைகளும் பயனடைந்துள்ளன.

கத்தோலிக்க திருச்சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 76, 610/= நீர்கொழும்பிலுள்ள 23 பங்குத் தளங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. இருபத்தி மூன்று பங்கு கோவில்களில் ஞாயிறு மறைக் கல்வி வகுப்புக்கள் வாரா வாரம் நடைபெற்று வருகின்றன.

மொத்தமாக வழங்கப்பட்ட 1, 10, 000/= ரூபாவில் மிகுதிப்பணம் இந்து, பௌத்த, இஸ்லாம் மதத்தவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

நல்ல பிரசைகளை உருவாக்க முறையான மறைக்கல்விப் போதனை அவசியம் என்பதனை உணர்ந்தே மாநகரசபை இம் முயற்சியில் ஈடுபட்டுவருகின்றது.

## போதைப் பொருளை எதிர்க்க இளைஞர் உறுதி

தம்மையொத்த வயதினர் மத்தியில் போதைப் பொருள் ஏற்படுத்தும் தாக்கத்தை உணர்ந்த கத்தோலிக்க இளைஞர் குழுவொன்று இந்தப் பெருங்கேட்டை அடியோடு ஒழிக்க உறுதிபூண்டுள்ளது.

இஸ்லாமாபாத்திலிருந்து 578 கிலோமீற்றர் தூரத்திலுள்ள முல்தான் என்னுமிடத்தில் ஜனவரி 26-ம் திகதி கூடிய மறைவட்ட இளைஞர் ஆணைக்குழு போதைப் பொருளுக் கெதிரான போராட்டத்தில் புனர் வாழ்வளிப்பதும் அறிவூட்டுவதுமே தாம் செய்யவேண்டிய பணி எனத் தீர்மானித்தது. பங்கு மட்டத்திலும் மறைவட்ட மட்டத்திலும் செயலாற்றுவதே இக் குழுவின் திட்டமாகும்.

கடந்த டிசம்பர் மாதம் சார்க் நாடுகள் பாகிஸ்தானில் கூடியபோது 1989-ல் அங்கத்துவ நாடுகளில் போதைப் பொருள் பாவனையையும், கடத்தலையும் தடுப்பதற்குமுதலிடம் அளிப்பதெனத் தீர்மானித்தன. துறவறசபை சிரேஷ்டர்களின் ஆன்மீக ஆணைக்குழு போதைப் பொருள் பாவனையோடு தொடர்பாக இளைஞர்களுக்கு ஒரு சிலுவைப்பாதையை அமைத்துள்ளது.

தாழ்வு மனப்பான்மையினாலும், அன்பற்ற உறவுகளினாலும், சமயத்தேவைகள் பூர்த்திசெய்யப்படாததாலும், தமது மாண்பை உணராததாலும், சமுதாய அமைப்புகள் காரணமாகவும் இளைஞர் போதைப் பொருளை உபயோகிக்கத் தொடங்குகின்றனர் என இந்த ஆணைக்குழு முல்தானில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கூறியுள்ளது. ஆகவே இளைஞர்களின் சிறப்புகளை உணர்வது, அவர்களோடு உறவுகளை வலுப்படுத்துவது, அர்த்தமுள்ள செபவழிபாடு, ஆலோசனை பெற வசதிகள்— இவையனைத்தும் அவசியம் எனவும் அது கூறியுள்ளது.

## மன்னாரில் திருநிலைப்படுத்தல்



மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் 30-03-1989 வியாழக்கிழமை தோலகட்டி செபமாலைத் தாசர் சபையைச் சார்ந்த அருள்திரு ஜுட் ராஜா குலாஸ் C. R. அவர்கள் மன்னார் மறைவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் அவர்களால் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார்.

காலை 9-30 மணிக்கு பேராலயம் இறைமக்களால் நிறைந்திருக்க ஏராளமான குருக்கள் புடைசூழ திருநிலைப்படுத்தல் இனிதே நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவியர், இறைமக்கள் அனைவரினதும் சிறந்த முறையிலான ஒத்துழைப்பு பாராட்டுதற்குரியதாகும்.

செபமாலைத்தாசர் சபையின் உயர்தலைவர் அருட்தந்தை M. L. அலோசியஸ் C. R. அவர்கள் குருப்பட்ட வழிபாட்டில் கலந்து தமது மறையுரையில் செபமாலைத்தாசர் சபையின் ஆச்சிரமங்கள் ஒவ்வொரு மறைவட்டத்திலும் நிறுவப்பட்டு செபவாழ்வு செழிக்க வேண்டும் என்றும், இந்தியாவைப் போல இலங்கையிலும் இச்சபைக்கு ஏராளமான இறை அழைத்தல்கள் பெருகவேண்டும் என்றும் கூறினார்.

தமது முதல் திருப்பலியை புதிய குரு தமது வங்காலை பங்கின் புனித அன்னாள் ஆலயத்தில் 31-03-1989ல் நிறைவேற்றினார்.

அருட்திரு A. M. ஸ்ரீபன் C. R.

## இளைஞரும் குடும்பமும் பற்றிய மகாநாடு

தென் கிழக்கு ஆசிய துறவறசபை சிரேஷ்டர்களின் ஏழாவது மகாநாடு சிங்கப்பூரில் ஜூன் 5—13 திகதிகளில் நடைபெறும்.

மலேசியாவும் சிங்கப்பூரும் ஒருங்கிணைந்து நடத்தும் இம் மகாநாட்டில் 60 சிரேஷ்டர்கள் மட்டில் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

15 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் இம்மகாநாடுகள் அதன் அங்கத்துவ நாடுகளாகிய இந்தோனேஷியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து ஆகியவற்றுள் ஒன்றில் நடைபெறுவது வழக்கம். முதல் ஐந்து மகாநாடுகளும் பண்பாட்டுமயமாக்கலை மையக்கருத்தாகக் கொண்டிருந்தன. பின்னர் இளைஞரை மையக் கருத்தாகக் கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டது. இவ்வருடத்திய தலைப்பு ''இளைஞரும் குடும்பமும்'' என்பதாகும்.

பெங்களூரில் நிகழ்ந்த ஒரு துறவறசபை சிரேஷ்டர் மகாநாட்டின் போது, இந்தோனேஷியா, பிலிப்பைன் நாடுகளின் பிரதிநிகள் தென்கிழக்காசிய துறவற சிரேஷ்டர் சங்கத்தை நிறுவவேண்டுமெனத் தீர்மானித்தனர். ஆசிய நாடுகள் அனைத்திலுமிருந்து சிரேஷ்டர்கள் ஒன்று கூடுவது கடினமாகையால் இவ்வாறு பிராந்திய மட்டத்தில் ஒன்று கூடத் தீர்மானித்தனர். இதன் விளைவே தென்கிழக்காசிய துறவறசபை சிரேஷ்டர் மகாநாடாகும்.

## குருக்கள் பற்றாக்குறை

இரு ஆண்டுகளே நிறைவு பெற்றுள்ள சிபு மறை மாவட்டத்தில் குருக்கள் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உள்ளது என அதன் ஆயர் டொமினிக் சூ ஹால் சியூ கூறியுள்ளார்.

மறை மாவட்டத்திலுள்ள 12 பங்குகளில் 15 குருக்களும் 14 மறையாசிரியர்களுமே உள்ளனர். சில பங்குகளின் மிஷன் நிலையங்கள் நெடுந்தூரம் பிரயாணம்செய்து அடைய வேண்டிய இடத்திலுள்ளன.

சிபு பேராலயத்தில் இரண்டு குருக்கள் இருந்து 103 கிளைப் பங்குகளைக் கவனிக்கின்றனர். மற்றொரு குரு பங்கின் பக்திச் சபைகள், பாடகர் குழாம்கள் குழுக்கள், செபமாதர் சங்கங்கள் ஆகியவற்றைப்பார்த்து வருகிறார்.

## தேவ அழைத்தலுக்கான
## உலக செபதினம்
## 16-4-89
### ஞாயிற்றுக்கிழமை

இது தொடர்பான திருத்தந்தையின் செய்தியை அடுத்த இதழில் எதிர்பாருங்கள்.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம்கருத்து

### கத்தோலிக்க பாடசாலைகள்

எதிர்வரும் 16 ஆம் திகதி தேவஅழைத்தலின் 26 ஆவது உலக செபதினம். தேவ அழைத்தலுக்கான உலக செபதினத்தை முன்னிட்டு திருத்தந்தை இவ்வாண்டு விடுத்துள்ள செய்தி கத்தோலிக்க பாடசாலைகளில் அழைத்தல் மலரும் சாத்தியத்தையும் அவசியத்தையும் விளக்குகின்றது.

''அனைத்து வளர்ச்சியையும் கிறிஸ்தவ முதிர்ச்சியையும் தனி ஒருவர் பெறுவதற்கு கத்தோலிக்க கல்வி நிலையங்கள் பங்களிக்கவேண்டும்'' என்று திருத்தந்தை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையின் பல பாகங்களிலும் கத்தோலிக்க கல்வி நிலையங்கள ஏராளம் உள்ளன. அறுபதுகளில் பெரும்பாலான பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்ட போதிலும் அவை றோ. க. (R. C.) என்ற நாமத்தை இன்னமும் இழந்துவிடாது காத்துவருகின்றன. இக் கல்லூரிகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை நாம் மதிக்கிறோம் என்று குறிப்பிடும் திருத்தந்தை பிற சமய பாடசாலைகளில் பணிபுரியும் கத்தோலிக்கஆசிரியர்களையும் அரவணைத்துக்கொள்கிறார்.

எமது நாட்டில் கத்தோலிக்க பாடசாலைகள் என்றவுடன் எமது மனக்கண்முன் வருபவை குருக்கள், கன்னியர்கள் பணிபுரியும் பாடசாலைகளே. திருத்தந்தையின் வேண்டுகோளுக்கு இணங்க இத்தகைய பாடசாலைகளிலேயே அதிகமான தேவ அழைத்தல்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. எமது மறைவட்டத்தைப் பொறுத்தவரை இவ்வாண்டு நாம் பெற்றுக்கொண்ட புதிய சிறிய குருமட மாணவர்களில் பெரும்பான்மையானவர்கள் இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியிலிருந்தே வந்திருக்கின்றனர். இவர்கள் பல்வேறு இடங்களிலிருந்தும் தமது கல்வியைத் தொடர்வதற்காக இளவாலைப் பாடசாலையில் மாணவர்களாகச் சேர்ந்து கல்வி கற்றவர்கள்.

''பரிசுத்த ஆவியினால் இளம் உள்ளங்களில் வேரூன்றப்பட்ட தேவ அழைத்தலுக்குரிய விதைகள் வளர்ச்சியடைய ஊக்கம் அளிக்கும் கடமை கத்தோலிக்க பாடசாலைகளுக்கு உண்டு'' என்கிறார் திருத்தந்தை. அப்பணியை மேற்குறிப்பிட்ட பாடசாலை திறம்பட ஆற்றியதன்காரணமாகவே பெயர் சொல்லிப் பெருமைப்படும் அளவுக்கு அதன் பணி உயர்ந்து நிற்கின்றது.

புதிய அரசாங்கக் கொள்கையின்படி மதப்பிரமுகர்கள் தாம் வதியும் இடங்களுக்கு அண்மையிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் உரிமை பெற வாய்ப்புக்கள் உள்ளன. சம்பந்தப்பட்டவர்கள் இச்சந்தர்ப்பத்தை நழுவவிடாது முழுப்பலனையும் பெற ஊக்கமுடன் முயலவேண்டும்.

ஒரு குருவின் பணியானது இறைவார்த்தையை எடுத்துரைப்பதும், நற்கருணை விருந்தில் தலைமை தாங்குவதும், இறைவாக்குரைத்து திருச்சபையைக் கட்டிஎழுப்புவதும், சகோதர அன்புப் பணிபுரிந்து இறைவனுக்கு இன்றைய சாட்சிகளாக மிளிருவதுமாகும்.

இத்தகைய பணிக்கு அழைத்தல்கள் பெருக கத்தோலிக்க பாடசாலைகளுக்கு தனிப்பட்ட கடமையுண்டு. அத்தகைய பணி சிறக்க கிடைக்கும் சந்தர்ப்பங்களை பூரணமாகப் பயன்படுத்துவோம்.

பாஸ்கா காலத்தின் 4ஆவது ஞாயிறு கடந்த 26 ஆண்டுகளாக தேவஅழைத்தலுக்கான உலக செபதினமாக அனுசரிக்கப்பட்டு வருகின்றது. அழைத்தலின் வித்து முளைவிடும் விளைநிலம் குடும்பம். அந்தக் குடும்பத்தில் விதைக்கப்பட்ட விதை வளர கத்தோலிக்க பாடசாலைகளே தூண்டுகோலாக இருக்க எமது கத்தோலிக்கர் இன்று, பிற பாடசாலைகளை நாடி, ஓடி இடம்பிடிக்க முயலும் காட்சிகள் வேதனை மிக்கவை.

இந்நிலைக்கான காரணத்தை இனங்கண்டு, குறைநீக்கி வழிசமைப்போம். அழைத்தல்களைப் பேணிப்பாதுகாத்து, வளர்ப்போம்.

## தேனருவி

பாஸ்கா 4ஆம் ஞாயிறு (16-04-1989)

### செவி கொடுங்கள்

இறைவன் நமக்கு இரண்டு காதுகளும் ஒரு வாயும் தந்ததன் நோக்கம் என்ன தெரியுமா? நாம் பேசுவதிலும் இருமடங்கு செவி கொடுக்க வேண்டும் என்பதே. ஒரு மணிவேளை பேசினால் இருமணிவேளை கேட்க வேண்டும்.

ஒருவர் இன்னுமொருவரிடம் என் கதையைக் கேள்... என்று தன் மனதில் நிறைந்த கவலைகளை சொல்ல ஆரம்பிக்க அடுத்தவரும் ஏதோ கரிசனை உள்ளவர் போன்று எனக்கும் அப்படித்தான் என தன் கதையையும் அதே வேளையிலேயே தொடங்கி விடுவார். இதனால் இருவரின் உரையாடலிலும் திருப்தியற்ற நிலை. உறவில் வளர்ச்சியின்றி, கூட்டத்திலும் தனிமை உணர்வு பலரை வாட்டுகின்றது.

இறை- மனித உறவின் ஒன்றிப்பிற்கும் நிறைவுக்கும் அடித்தளமாக ''ஆடுகள் எனது குரலுக்கு செவி கொடுக்கின்றன. நானும் அவற்றை அறிவேன்'' என்று ஒருவருக்கு ஒருவர் செவிமடுக்கும் பண்பை அமைக்கிறார் இயேசு, உள்ள அமைதியை விரும்பும் மனிதன் அமைதியான சூழலையும், நிசப்த நிலையையும் வெறுக்கிறான். அமைதியான வேளையில் மனிதனின் அடிமனதின் வெறுமையும், அங்கலாய்ப்பும் அவனது அமைதியைக் குலைப்பது போன்ற ஒரு உணர்வு. இதனால் சத்தம் சந்தடியில் மனிதன் ஒழிந்து கொள்கிறான். ஓயாது பேசித் தொலைக்கிறான். அல்லது வானொலி, தொலைக்காட்சி. ஆடல், பாடல், என்று சத்தங்களை உண்டு பண்ணுகின்றான். அல்லது கனவு காண்பதிலும், மதுபோதையிலும் அங்கு இங்கும் சுற்றித் திரிவதிலும் வெறுமையை நிரப்ப முயலுகின்றான்.

இதனால் வாழ்வு விரக்தியிலும், ஏமாற்றத்திலும், அழிவிலும் பூச்சியமாகிறது.

இறைசந்நிதானம் செல்லும்போது எம் தேவைகளை நிரைப்படுத்தி நீண்ட பட்டியலை சமர்ப்பிக்கும் வாடிக்கையான மேலெழுந்த உரையாடலை நீக்கி எம் மனதைத் திறந்து எம் பொறுமையை ஆண்டவனுக்குக் காண்பிப்போம் இறைவன் என்ற கண்ணாடியில் எமது அடிமன உணர்வுகளின் உண்மைத் தோற்றத்தைப் பார்ப்போம். "ஆண்டவரே, நான் என்ன செய்ய வேண்டும்'' என்று புனித இஞ்ஞாசியார் செபிப்பது போன்று அவர் கூறும் வார்த்தைக்கு. குரலுக்குக் காதால் மட்டுமல்ல உள்ளத்தால் செவிமடுப்போம்

யூதர்கள் தமக்கு எல்லாம் தெரியும் என்ற அகங்காரத்தில இதயக் கதவுகளை மூடிக் கொண்டனர். இதனால் சின்னப்பரும், பர்னபாவும் யூத எல்லைகளைக் கடந்து திறந்த மனம் கொண்ட புற இனத்தவர் மத்தியில் கிறிஸ்து பற்றி உரையாடத் தொடங்கினர், செவிமடுத்தவர் உள்ளம் மகிழ்ந்தனர். அமைந்த மனதுடன் ஆண்டவன் வார்த்தைக்குச் செவிமடுத்தவர் வாழ்வுதரும் நீரூற்றுக்கள் தமக்கு முன் ஓடிக் கொண்டிருப்பதைக் காண்பார்கள். ஆயனின் பராமரிப்பில் கிடைக்கும் பாதுகாப்பும், வாழ்வும், நம்பிக்கை உணர்வும் அவருக்கும் அவர் தரும் செய்திக்கும் செவி மடுப்பவருக்கு தாராளமாகக் கிடைக்கின்றன.

சுவாமி ஜீவா போல் அ. ம. தி.

அப். பணி. 13: 14, 43-52 புற இனத்தார் இதைக் கேட்டு மகிழ்ந்தனர்.

திரு வெளி. 7: 9, 14-17 நீரூற்றுக்கு அவர்களை நடத்திச் செல்வேன்.

அரு. 10: 27-30 என்குரலைக் கேட்பவர் என்றும் அழியார்

## கடந்த காலபோகத்தில் 7000 பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மன்னார் துயர் துடைப்புச் சங்கம் நிவாரணம் வழங்கியது

ம. து. ம. சங்கம் கடந்த காலபோகம் 88/89 இல் ஏறக்குறைய ஏழாயிரம் விவசாயிகளுக்கு விதை நெல், நெல் உரம், மிளகாய் உரம் பழமரக்கன்றுகள் போன்றவற்றை அவர்களின் தேவைக்கு ஏற்ப மாவட்டத்தில் உள்ள 12 கமநலசேவை நிலையங்கள் ஊடாக விநியோகித்து வந்தது. இதில் ஐம்பது வீதமானோர் மாவட்டத்தில் ஏற்பட்ட வரட்சியின் காரணமாக சிறிது பாதிப்பு அடைந்தனர். இவர்கள் ஏற்கனவே அறிவித்தது போன்று ம. து. ம. ச. சுழற்சி நிவாரண நிதிக்கு ரூபா 25/- மாத்திரம் செலுத்துமாறு கேட்கப்படுகின்றனர். மிகுதி ஐம்பது வீதமானோர் தாம் பெற்ற அறுவடையின் பயனில் ஒருசிறு பகுதியாகிய 100/=வை மேற்படி சுழற்சி நிவாரண நிதிக்கு மாவட்டத்தில் உள்ள 12 கமநலசேவை நிலையங்களின் ஊடாகவும், அடம்பன் ப. நோ. கூ. சங்க முகாமையாளர், ம. து. ம. ச. பிரதான காரியாலயம் மூலமாகவும் செலுத்துமாறு தாழ்மையாக கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இது சம்பந்தமாக போதிய விளம்பரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட நபரிடம் பணத்தை செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளவும், இப்படியாக சேகரிக்கப்படும் நிதி பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீண்டும் உதவிசெய்ய பயன்படுத்தப்படும்.

மேற்படி விவசாய உதவி திட்டத்திற்கு நிதி வழங்கிய கொழும்புசிறுவர் பராமரிப்பு நிதியம், கெயர் ஸ்தாபனம், யாழ் அகதிகள் புனர் வாழ்வுக்கழகம், போன்றவற்றிற்கும் ஒத்துழைப்பு நல்கிய மன்னார் அரசாங்க அதிபர் திரு. எஸ். தர்மபாலன், நான்கு உதவி அரசாங்க அதிபர்கள், கமநல சேவை உதவி ஆணையாளர் திரு. கெ. கணேஷ், உதவி விவசாய பணிப்பாளர் திரு. கே. தட்சணாமூர்த்தி உதவி கூட்டுறவு ஆணையாளர், முன்னாள் உதவி உணவு ஆணையாளர் திரு. பி. பற்குணம், அடம்பன் ப. நோ. கூ. ச. முகாமையாளர், விவசாய கமநலசேவை உத்தியோகஸ்தர்கள் மற்றும் தொண்டர்களுக்கும் இச்சங்கத்தின் செயலாளர் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் சார்பில் நன்றியை தெரிவிக்கின்றார்,

மேற்படி திட்டத்தின் கீழ் மிளகாய் செய்கை மேற்கொண்டவர்கள் நல்ல அறுவடையைப் பெற்றுக்கொண்டதுடன் ஒரு கிலோ செத்தல் மிளகாயை ரூபா 70/- தொடக்கம் 80/- வரை விற்று பயன் அடைகின்றனர். மேலும் நெற்செய்கையை மேற்கொண்டவர்கள் ஏக்கருக்கு சராசரி 90-120 புசல் வரை விளைவு பெற்றதுடன் ஒரு மூடை (3 புசல்) நெல்லை ரூபா 420/- தொடக்கம் 460/- வரை விற்று பயன் அடைகின்றனர். இவர்களை தமது இவ்வருட காலபோகம் 89/90க்கு மிளகாய் விதைகளையும், விதை நெல்லையும் சேகரித்து வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். விதை சேகரிப்பு சம்பந்தமான பயிற்சி வகுப்புக்கள் சகல விவசாய போதனாசிரியர்களினால் சகல கமநல சேவை நிலையத்திலும் நடத்தப்பட்டு வருகின்றது. இவற்றில் கலந்து பலனை பெறுமாறு சகல விவசாயிகளும் கேட்கப்படுகின்றனர்.

### சிரிக்க சிந்திக்க ...

தந்தை:- மகனே உனது வயதில் ஆபிரகாம் லிங்கன் உழைக்கத் தொடங்கிவிட்டார்.

மகன்:- அப்பா அதெல்லாம் எனக்குத் தெரியாது. ஒன்று மட்டும் எனக்குத் தெரியும். உங்கள் வயதில் ஆபிரகாம் லிங்கன் ஜனாதிபதி ஆகிவிட்டார் என்பது.

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

# திருச்சபையிலும் உலகிலும் பொதுநிலையினரின் அழைப்பும் பணியும்

1987ல் ஆயர் சங்கக் கூட்டத்தின்பின் வெளிவிடப்பட்ட ஏடானது பொதுநிலையினரின் அழைப்பையும் பணியையும் பற்றிக் கூறுகிறது. ஒரு முகவுரையும், இந்து அதிகாரங்களும் வேண்டுகோளும் செபமும் கொண்ட ஒரு முடிவுரையும் இந்த ஏட்டின் உள்ளடக்கமாகும்.

சங்கத்தின்பின் திருத்தந்தை II-ம் அருள் சின்னப்பர் வெளியிட்ட இந்த நான்காவது அறிவுரை 1987 ஆம் ஆண்டு சங்கக் கூட்டத்தில் இடம்பெற்ற வளமான கருத்துப் பரிமாறல்களை பிரதிபலிக்கும் நோக்குடன் எழுதப்பட்டதாகும்.

சங்கக் கூட்டத்தின் கருத்தொற்றுமை "இறைமக்களுக்கு அளிக்கும் செய்தி" மீது எடுக்கப்பட்ட வாக்கெடுப்பிலும் கொண்டுவரப்பட்ட ஆலோசனைகளிலும் மாத்திரம் வெளிப்படவில்லை. தனிநபர்களினதும், குழுக்களினதும் அறிக்கைகளிலும், சங்கத்தில் பங்குபற்றிய அங்கத்தவர் பார்வையாளர் ஆகிய இருபாலாரின் பங்களிப்புகளில் காணப்பட்ட பொதுவான அணுகுமுறைகளிலும் கூட வெளிப்படுகின்றது. சங்கத்தின் பின் வெளியிடப்படும் இந்த அறிவுறுத்தல் சங்கக்கூட்டத்தின் விளைவுகளை முழுமையாகப் பிரதிபலிக்க வேண்டுமென்பது திருத்தந்தையின் விருப்பமாகும். எனவே சங்கக் கூட்டத்தின் பின் திருத்தந்தை வெளியிட்ட அறிவுரைகளுள் மிக நீண்டதான இவ்வறிக்கை பொதுவாகத் திருச்சபைக்கும் சிறப்பாக பொதுநிலையினருக்கும் விடுக்கப்படும் ஒரு அழைப்பாகும்.

ஏனையவற்றுடன் இதில் மூன்று விடயங்கள் குறிப்பாக எடுத்தாளப்படுகின்றன. இவை இன்றைய திருச்சபைக்கே உரியவை. அவைகள் தாம் இயக்கங்கள் பணிகள், பெண்மை ஆகிய விடயங்களாகும்.

"பெண்ணின் மகத்துவம்" என்னும் அப்போஸ்தலிக்க மடலில் பெண்மை என்னும் விடயம்பற்றி இன்னும் விரிவாக எடுத்தாளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த அறிவுரையில் தரப்படும் "பாருன் இன்றைய நிலை" திருச்சபையின் சிந்தனைக்கு சங்கம் அளித்த பங்களிப்பைக் காட்டுகின்றது.

இந்த ஏடானது ஒன்று படுத்தப்பட்ட ஒரு கருத்தை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது இக்கருத்தானது ஏடு முழுவதிலும் இழையோடி நின்று அதனை ஒன்றுபடுத்தி கோட்பாட்டைப் பொறுத்த மட்டிலும், நடையைப் பொறுத்தமட்டிலும் அதற்கு ஓர் ஒருமைப்பாட்டைக் கொடுக்கின்றது. இவ்விடயத்தில் நற்செய்தியிலுள்ள திராட்சைக் கொடியினதும் திராட்சைத் தோட்டத்தினதும் உவமையும் ஏட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

முதலாவது அதிகாரத்தில் திருச்சபை என்னும் மறைபொருளில் பொதுநிலையினரின் மகத்துவம் பற்றிய இறையியல் கோட்பாடுகள் எடுத்தாளப்படுகின்றன. கிறிஸ்துவின் முப்பணிகளிலும் — அதாவது அவரது குருத்துவப்பணி, தீர்க்கதரிசனப்பணி, இராஜரீகப் பணி ஆகியவற்றில் பொதுநிலையினரைப் பங்காளிகளாக்கும் ஞானஸ்நானம் பற்றிக் குறிப்பிடப்பின, ஏடு பொதுநிலை விசுவாசிகளின் உலகியல் தன்மையையும், பரிசுத்தத்துக்கான அவர்களது அழைப்பு, உலகில் அவர்களது அழைப்பையும் பணியையும் மையமாகக் கொண்டுள்ளது என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது.

ஆள்தன்மையில் கிறிஸ்துவுடன் கிறிஸ்தவனுக்கு ஒன்றிப்பைப் பற்றிக் கூறியபின், இரண்டாவது அதிகாரத்தில் ஐக்கியமாக இருக்கும் திருச்சபையின் வாழ்வில் பொதுநிலையினரின் பங்குபற்றிக் கூறப்படுகின்றது. இந்த ஐக்கியத்தின் காரணத்தால் திருச்சபையின் பல்வேறு உண்மைநிலைகள் ஒன்றோடொன்று மிக நெருக்கமாக இணைக்கப்படுவது அவசியமாகின்றது. இது தொடர்பாக பல பணிகளும், சேவைகளும் அலுவல்களும், வேலைகளும், பொறுப்புக்களும், அருங்கொடைகளும் நினைவுக்கு வருகின்றன. இவையனைத்தும் அனைத்துலக திருச்சபையினதும் தலத்திருச்சபை, பங்குத் திருச்சபைகளினதும் உள்ளரங்க அமைப்பிலும் செயற்பாட்டிலும் நன்கு கருத்திற்கொள்ளப்படவேண்டும். அதே வேளையில் தனிநபர், குழு ஆகியவற்றின் பங்களிப்பையும் அங்கீகரித்து ஊக்குவிக்கவேண்டும்.

திருச்சபை மறைபரப்புத் தன்மையைக் கொண்டிருப்பதால், மூன்றாவது அதிகாரத்தில் முழு உலகிலும் நற்செய்தி பரப்புவதில் பொதுநிலையினருக்குரிய கூட்டுப் பொறுப்பையும், தனி மனிதருக்கும் சமுதாயத்துக்கும் பணிசெய்வதில நற்செய்தியை வாழ்விற் கடைப்பிடிப்பதையும்பற்றிக் கூறப்பட்டுள்ளது. "இறையருளின்நல்லமேற்பார்வையாளர்" என்ற வேதாகமத் தலைப்பின் கீழ் நான்காவது அதிகாரம் பணிக்கு அழைக்கப்பட்ட பல்வேறு குழுவினரை கவனத்திற்குக் கொண்டுவருகிறது. இளைஞர், பிள்ளைகள் முதியோர் ஆண்கள், பெண்கள், நோயாளர் துன்புறுவோர் ஆகியோரை அவர்களின் பல்வேறுபட்ட வளமான அழைப்புகள் நிலைமைகளில் கவனத்திற்குக் கொண்டுவருகிறது.

திருச்சபையின் செயற்பாடுகளில் பங்காளர்களான தமது பொறுப்பினைப் பயனுள்ளவிதமாக நிறைவேற்றும்படிக்கு பொதுநிலையினருக்கு ஒரு நல்ல முழுமையான உருவாக்கம் அவசியம். இது அவர்கள் தமது அழைப்பையும், பணியையும் உணர்ந்து அதன்படி வாழத் துணைபுரியும். இதனால் திருச்சபையின் ஒருமைப்பாட்டில் அவர்கள் இறைவனுடன் ஒத்துழைத்து, ஒருவர் ஒருவரைக் கட்டியெழுப்ப இடைவிடாது முயல்வார்கள்.

முடிவுரையில், திருச்சபையின் பணியில் ஒவ்வொருவரின் பங்களிப்பையும் கோரி, கூட்டம் நடைபெற்ற மரியாயினது ஆண்டின் நினைவாக மரியாளுக்கு ஒரு செபத்துடன் இந்த ஏடு முடிவுபெறுகின்றது.

## மாத்தளை பிராந்திய மேய்ப்புப்பணி நடுநிலைய திறப்புவிழா

பங்குனி மாதம் 4-3-1989 திகதியன்று காலை மாத்தளை பிரான்சிஸ்கள் சபை தலைமையிடத்தில் கண்டி மறை மாவட்ட ஆயர் அதி. வண. வியானி பெர்னாந்து அவர்களின் வரவேற்புடன் அன்றைய திருப்பலி ஆரம்பிக்கப்பட்டது. இத் திருப்பலியானது, அதி. வண. ஆயர் வியானி பெர்னாந்துவின் தலைமையிலும் மற்றும் வண. பிதாக்கள் ஆபிரகாம், நந்தன, லூஷன், கிரகரி, வின்ஸ்டன், ஹில்டர் பிராட், ஆகியோருடனும் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

திருப்பலி பூசையை தொடர்ந்து மாத்தளை பிராந்திய மேய்ப்புப் பணிக்கான அதி. வண. ஆயர் வியானி பெர்னாந்துவினால் திறந்து வைக்கப்பட்டது. இதை தொடர்ந்து எமது பண்பாட்டுக்கமைய விளக்கேற்றும் நிகழ்ச்சி ஆரம்பமானது. முதலில் மாத்தளை பிராந்திய மறைபணி மன்றத்தின் திறப்பு விழாவைச் சிறப்பிக்க வருகை தந்திருந்த, கண்டி மறை மாவட்ட ஆயர் வியானி பெர்னாந்து அவர்களினால் விளக்கேற்றி வைக்கப்பட்டது. அதை தொடர்ந்து மறைபணி மன்ற இயக்குனர் சங். சகோ. ஜஸ்டஸ் அவர்களும் கண்டி மறை பணி இயக்குனர் வண. பிதா நந்தன அவர்களும், நுவரெலியா பங்கை சேர்ந்த வண. பிதா. ஆபிரகாம் அவர்களும் தொடர்ந்து வண. பிதாக்கள் கிரகரி ஹில்டர் பிரான்ட், மகேந்ரா ஆனந்தப்பா, லூசன் ஆகியோரும் உப இயக்குனர் சங். சகோ. ஜோசப் அவர்களும், மாத்தளை பங்குத் தந்தை வண பிதா. வின்சன்ட் பெர்னாந்து அவர்களும், சங். சகோ பிதேவிஸ், வண. சகோ கிறிஸ்டீன் அவர்களும், ஹெகோட்டை பங்கின் சார்பில் திரு மிலான் பற்றிக், பன்விலை பங்கின் சார்பில் செல்வி புஸ்பா மேரி மாத்தளை பங்கின் சார்பில் திருமதி ரிடா ராஜேந்திரம் ஆகியோரும் விளக்கேற்றினர்.

இந் நிகழ்ச்சிக்கு பின்னர் மறை பணி மன்ற இயக்குனர் சங். சகோ ஜஸ்டஸ் அவர்களினால் ஆரம்ப உரை வழங்கப்பட்டது. தொடர்ந்து எமது கண்டி மறை மாவட்ட ஆயர் அதி. வண. வியானி பெர்னாந்துவினால் ஓர் உரை வழங்கப்பட்டது. அதில் அவர் மறைபரப்பு பணியின் முக்கியத்தை எடுத்து கூறி, அதில் பொது நிலையினரின் பங்கு, அவர்களின் கடமைகள் பற்றியும் விளக்கி கூறினார் பின்னர் சங். சகோ ஜோசப் அவர்களால் நன்றியுரை வழங்கப்பட்டது. தொடர்ந்து மறை பணி மன்றத்தால் நடாத்தப்படும் மறைபரப்பு வகுப்புக்கள் சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் ஆரம்பிக்கப்பட்டது. மாத்தளை பிராந்தியத்தை சேர்ந்த நம் அனைவருக்கும் இந்நாள் ஓர் நன்னாளாகவும், மகிழ்ச்சிக்குரிய தினமாகவும் அமைந்தது என்பதில் சந்தேகமில்லை கிறிஸ்துவின் நற்செய்தியை உலகிற்கு அறிவிக்க மறைபணியாளர்களை உருவாக்குவதே இந்நிலயத்தின் நோக்கமாகும்

செல்வி ஷாமனி இம்மானுவேல்
மாத்தளை

## நெடுந்தீவில் திருவழிபாட்டுக்குழு உதயம்

நெடுந்தீவுப் பங்குத் தந்தை அருள்திரு. M. M. V அமிர்தகுமார் அவர்களால் பங்கில் திருவழிபாட்டுக்குழுவொன்று அமைக்கப்பட்டது. 12-2-89 காலை 11-00 மணியளவில் ஆசனக் கோவில் மண்டபத்தில் பங்குத் தந்தையின் அழைப்பின் பேரில் அங்கு வருகை தந்திருந்த மக்களுடன் இக் குழுவின் ஆரம்ப கூட்டம் நடந்தது

முதல் நிகழ்ச்சியாக திருமறை நூலில் இருந்து சில வாசகங்கள் வாசிக்கப்பட்டது. தொடர்ந்து பங்குத் தந்தை திருவழிபாட்டுக்குழுவின பங்கு பற்றி விரிவாக எடுத்துக் கூறினார். அவரின் உரையைத் தொடர்ந்து வழிபாட்டின் சிறப்பு பற்றி சிறப்புரை வழங்கினார். அருள் செல்வன் கருணாரத்தினம் தன் உரையில் மற்றவர்கள் பார்க்கிறார்கள் என்பதற்காக நாம் வழிபாட்டில் கலந்துகொள்ளக் கூடாது. உண்மையான பரிசுத்த ஆவியின் அருள்கேட்டு நாம் அனைவரும் ஒன்றிணைந்து இறைவனோடு வழிபாடு மூலம் இரண்டறக்கலக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். அங்கு குழுமியிருந்தவர்களுக்கு அருள் செல்வி லொறன்ரினா சில அறிவுரைகள் வழங்கினார். இறுதியாகப் பங்குத்தந்தையை தலைவராகக் கொண்ட இக்குழுவுக்கு செயலாளராக ஆசிரியை ப. ஸ்ரெலா ரஞ்சனியும், உப செயலாளராக A S M. பீலிக்ஸ் ஆசிரியரும் தெரிவு செய்யப்பட்டார்கள். ஒன்பது கோயிலைக் கொண்ட ஒரு பங்கில் அனைத்துக் கோவில் அங்கத்தவர்களும் கலந்து கொண்டார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வாரத்தில் ஒவ்வொரு வியாழனும் இக் குழுவின் கூட்டம் நடக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டுச் செபத்துடன் கூட்டம் நிறைவுபெற்றது.

நன்றி.

தகவல்:- நெடுநகர் நேசன்

## பரந்தனில் ஞானொடுக்கம்

கிளிநொச்சி மறைவட்டாரப் பங்குகளில் நடைபெற்ற தவக்கால ஞானஒடுக்கம் பரந்தன் பங்கில் சென்றமாதம் 9-ம் 10-ம் திகதிகளில் இடம் பெற்றது. 9-ம் திகதி வியாழக்கிழமை காலை முரசுமோட்டை முருகானந்த மகாவித்தியாலயத்தில் கிறிஸ்தவ மாணவர்களுக்கு உரைகள் வழங்கப்பட்டன. மாலை முரசுமோட்டை ஆலயத்தில் பொதுமக்களுக்கான உரையும் விரிவான மன்னிப்பு வழிபாட்டுடன் கூடிய திருப்பலியும் இடம் பெற்றன.

மறுநாள் 10-ம் திகதி காலை குமாரபுரம் இந்துமகா வித்தியாலயத்தில் கிறிஸ்தவ மாணவர்களுக்கு உரைகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து மாலையில் வளர்ந்தவர்களுக்கான உரையுடன் திருப்பலியும் இடம் பெற்றது. இவ்விரு இடங்களிலும் மறையாசிரியர்களின் வழிகாட்டலுடன் ஏராளமான மாணவர்கள் பங்குபற்றினர்.

அருள்தந்தை ஓம்லோ அ. ம. தி அடிகளாரின் வழிநடத்துகையின் கீழ் இடம் பெற்ற இரு நிகழ்ச்சிகளிலும் வட்டக்கச்சி பங்குத் தந்தை அருள்திரு. இராசுசைநாதன் அவர்களும், அருள்சகோதரன் அருள்நேசன் அவர்களும் மாணவர்களுக்கான உரைகளை வழங்கினர்.

தகவல்: ஞானமலர்.

## கருத்தரங்கு

மன்னார் மறை மாவட்டத்தின் பல பங்குகளிலிருந்தும் பொது நிலையினர் பங்குபற்றிய பொதுநிலையினரின் கருத்தரங்கு மாவட்டமுதல்வர் தலைமையில் இடம் பெற்றுப் பலதீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

1. மன்னார் மறைமாவட்டத்தில் அடங்கிய பாடசாலைச் சிறுவர்கள் நன்மைகருதி, பேச்

(தொடர்ச்சி 7 ஆம் பக்கம்)

# சம்மி மீண்டும் உயிர் பெறுகிறாள்

## சிறுகதை

வே. சாமுவேல்
(தெல்லிப்பழை)

சம்மி என்று அழைக்கப்படும் சர்மிளா; அந்த வைத்தியசாலையில் உள்ள 'உவாட்' ஒன்றிலுள்ள கட்டில் ஒன்றில் படுத்திருந்தாள். அவள் கண் விழித்தபோது என்பதைவிடச், சுயநினைவு வந்தபோது, தான் எங்கிருக்கிறேன் என்பதைப் புரியமுடியாதவளாக இருந்தாள்.

மேலே மின்விளக்கு, மின்விசிறி வழமையாக வைத்தியசாலைகளில் வீசும் ஒருவகை 'மணம்' இவற்றையெல்லாம் சேர்த்துப் பார்க்கும்போதுதான் வைத்தியசாலையில் இருப்பதாகச் சிறிது நேரத்தின் பின் உணரக்கூடியதாக இருந்தது. அடுத்து ஒரு குழந்தையின், பிறந்துவிட்ட அலறல் வீரிட்டுக் கத்தும் ஓசை. அப்படியானால் அவள் இருக்கும் உவோட்டிற்கு அருகில் ''மெற்றேணற்றி உவாட்''? ''அப்படியானால் நான் சாகவில்லை, உயிருடன் இருக்கின்றேன், கடவுளே!' என்று அவள் ஆன்மா ஏங்கியது.

அவளைக் கொண்டுவந்து வைத்தியசாலையில் அனுமதித்து இன்றோடு மூன்று நாட்களாகின்றன; என்பது அவளுக்குத் தெரியாது. காரணம் சுயநினைவற்ற நிலையிலேயே அவள் அங்கு சேர்க்கப்பட்டாள். ''ஆவி ஊக்கமுள்ளதுதான், ஊன் உடலோ வலுவற்றது'' என்றபடி, கடந்த இரண்டு நாட்களாகச் சம்மியைக் கண்ணயராது பார்த்த சம்மியின் தாயார் கட்டிலின் கீழே அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள்.

இப்போது தன்னை ஏன் வைத்தியசாலைக்கு கொண்டு வந்தார்கள் என்பதைச் சம்மி உணர்ந்துகொண்டாள். அவளுடைய சிந்தனைகள் பின்னோக்கிச் சென்றன.

★

சம்மி பெற்றோருக்கு ஒரேயொரு மகளாகப் பிறந்தவள் பரம்பரையாக வந்த 'காணி பூமிகள்' ஏராளம். சம்மி அந்த சத்துணவுத் திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கான நிலையத்தில் வேலைபார்த்து வந்தாள். பொ. க. உயர்தர வகுப்பில் கல்வி கற்ற காலத்தில் அவளுடைய தூரத்து உறவினனான அருளும் அவளோடு படித்து வந்தான். அவன் பின்னர் கிராமிய வங்கியொன்றில் வேலைபார்க்கத் தொடங்கினான், சமூகசேவை காரணமாகப் பள்ளிக்கூடத் தொடர்புகள் மீண்டும் தொடர நேர்ந்தன. அவர்களுக்கிடையே இருந்தது காதல் என்று குறிப்பிட முடியாவிட்டாலும் விருப்பங்கள் இருபக்கமும் மேலோங்கி நின்றன என்பதை மறப்பதற்கில்லை. இவை மனித உணர்வுகள் - 'அந்த வயதில்.'

இதனை ஓரளவு உணர்ந்த அருளின் பெற்றோர் சம்மியின் பெற்றோருக்குத் தூதனுப்பினர். சம்மியின் தந்தைக்கும் அது விருப்பமாக இருந்தது. அருளின் குணத்தை அவர் நன்கு அறிந்திருந்தார். அவர் அமக்கடி விவசாயக் கடனுக்காக அந்தக் கிராமிய வங்கிக்குச் சென்றுவந்தார்.

ஆனால் பரம்பரையாக வந்த ஏராளமான 'காணி பூமிகள்' தன் பரம்பரைக்குச் சென்றுவிட வேண்டுமென்று ஒற்றைக்காலில் நின்றாள் சம்மியின் அம்மா. அவள் அந்தப் 'பேச்சுக்காலுக்கு' முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஒரு 'துருப்பிடித்த ஆயுதத்தைக் கையில் எடுத்தாள்.

''ஒரு சமுதாயத்துக்குள்ளேயே சாதியைச் சுரண்டிப் பார்க்கும் நிலையில், எங்கடை 'சபை சந்தியிலை' அவைகள் இருக்கமுடியுமோ?' என்று தொடங்கினாள் அவள். அதற்கும் காரணம் இல்லாமல் இல்லை.

அவளுடைய அண்ணனின் மகன் பட்டணத்தில் 'மெடிக்கல் ஸ்ரோஸ்' ஒன்றை நடாத்தி வந்தான். அவனுக்குச் சம்மியைச் செய்துவைத்தால் காணி பூமியெல்லாம் தனபக்கம் சாரும் என்ற நம்பிக்கை அவளுக்கு. சிறிது நாட்களில் சம்மிக்கும் மைத்துனருக்கும் திருமணம் நிச்சயமானது. தாயின் கட்டளையைத் தாண்டி நடந்தது சம்மியின் வாழ்க்கையில் இதுவரை நடந்ததில்லை.

அன்று பத்து மணிக்கு ஆலயத்தில் திருமணம். கல்யாணத்துக்கான ஆயத்தங்கள் 'தடல்புடலாக' நடைபெற்றன. சோறு அவிகிறது. காய்கறி வெட்டப்படுகிறது — எல்லோரும் [illegible]சார் நிலையில் அப்போது சம்மி அந்தத் வீட்டுக்குத் தன் உடைகளை 'அயன்' பண்ணப் போய்த் திரும்பிக் கொண்டிருக்கிறாள்.

அப்போதுதான் அவள் ஒரு பேரிடி காத்திருந்தது. அவளுடைய மைத்துனன் சிங்கப்பூருக்குக் கடத்தப்பட்டது என்பதைக் காட்டிலும், பெரிய 'மெடிக்கல் ஸ்ரோஸ்' வேறொரு மாமிக்கு இருந்தும். அங்கு போனால் உல்லாசமான வாழ்க்கை நடத்தலாம் என்ற எதிர்பார்ப்புகள் முதலியனவும் சேர்ந்து அவன் சிங்கப்பூருக்குப் போய்விட்டான்.

அந்தத் வீட்டில் இருந்து வந்துகொண்டிருந்த சம்மி இப்பேரிடியை அறிந்து தலைகுனிந்தபடி வீட்டுக்குள் செல்கிறாள். போகும்போது பந்தலில் இருந்த ஒருத்தி ''செவ்வாய்க்குற்றம் இருக்கிற பெட்டையளுக்குக் கல்யாணம், பந்தலிலும் கடைசி நேரத்தில் குழம்புமாம்'' என்று ஏதோ சாத்திரங்களைக் கரைத்துக் குடித்தவன் போலக் கூறினாள். அது 'வெந்த புண்ணில் வேல்பாய்ந்தது போலானது' சம்மிக்கு.

ஓர் ஆணின் திருமணம் கடைசி நேரத்தில் குழம்பினாலும் அவன் அதைப் பற்றிப் பொருட்படுத்துவதில்லை. ஆனால் ஒரு பெண்...? மனமுடைந்த சம்மி அப்பாவின் புகையிலைத் தோட்டத்தில் இருந்துகொண்டுவந்த கிருமிநாசினியோடு அறைக்குள் சென்றாள். ஒருவரும் இதனை எதிர்பார்க்கவில்லை

கிருமி நாசினியின் 'நெடி' பரவியதால் எல்லோரும் சந்தேகத்தின் பேரில் முண்டியடித்துக்கொண்டு அவள் அறையை நோக்கி ஓடினார்கள். கதவுகள் உடைத்துத் திறக்கப்பட்டன. உணர்வற்ற நிலையில் சம்மி...

★

சிந்தனையில் இருந்து விடுபட்டபோது மறுபடியும் 'மற்றேணிற்றி உவாட்டில்' இருந்து வேறொரு பாலகனின் அழுகுரல். ''ஆண்டவரே என்னை மன்னித்தருளும'' என்று இருகைகூப்பி வேண்டினாள். சம்மி சுயநினைவுவந்ததைக் கண்ட தாய் இப்போது எல்லா நோக்கங்களையும் மறந்து கடைசிப்படியில் நின்றாள். ஏனெனில் அவளுடைய மனக்கோட்டைகள் தகர்ந்தன மகளை உயிரோடு வைத்திருக்கவேண்டுமென்ற எண்ணம் மட்டும்தான் இப்போது மேலோங்கி நின்றது.

அந்த வைத்தியசாலையின் அருகாமையில் அடைக்கல நாயகியின் ஆலயம் அமைந்திருந்தது அந்த ஆலயத்தின் பங்குத் தந்தை அவளைத் தரிசித்தார். அவர் கொடுத்த அறிவுரைகளின்போது அவளுடைய உள்ளத்தின் மாறுதல்களால் கண்கள் குளமாகின. பாவசங்கீர்த்தனத்துடன் இருவிருந்தும் முடிந்து பங்குத்தந்தை போய்விட்டார். அவர் கூறிய அறிவுரைகளை அமைதியாக மீண்டும் அசைபோட்டாள் சம்மி.

''வாழ்க்கையில் எத்தனையோ 'சிலுவைகள்' கல்வாரி போகும்வரை இடம்பெறுகின்றன. சில பெரிய சிலுவைகள், சில பாரம் குறைந்தவை வாழ்க்கைப் பாதையில் எத்தனையோ யூதாஸ்கள், பாரச்சுமைக்கு முண்டுகொடுக்கும் 'சீமோன்கள்' ஆறுதல் கூறவரும் யெருசலேம் பட்டணத்துப் புண்ணிய ஸ்திரிகள்? நாம் கஷ்டப்படும்போது எங்களையும் நினைத்துக்கொள்ளுங்கள் என்றுவரும் 'நல்ல கள்வர்கள்' இத்தியாதி எத்தனையோபேரை நாம் சந்திக்க நேரும்'' என்று கூறிய வார்த்தைகள் அவள்முன் நின்றன.''

ஆனால் பங்குத்தந்தை இறுதியாகச் சொல்லிச்சென்ற வார்த்தைகள் அவள் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தன ' உலகில் மனிதருக்கு வரும் 'சிலுவைகள்' யாவற்றிற்கும் தற்கொலைதான் பரிகாரமென்றால் இவ்வுலகில் எஞ்சி நிற்கக்கூடியவை கல்லறைகள்தான்.''

இப்போது சம்மியின் மனப்பாரம் குறைகின்றது. தற்கொலை முயற்சியின்போதிருந்த வேகம், பிடிவாதம், வைராக்கியம் முதலியன இப்போது இல்லை.

சம்மி முன்னர் மறை வகுப்புக்களுக்கான பயிற்சிபெற்று 'ஞாயிறு மறைக்கல்வியில்' கலந்துகொள்வாள். அப்பொழுது ஒரு வகுப்பில் மறை ஆசிரியர் ஒருவர் தனது உரையை நிகழ்த்தினார். ''மானிட உயிரைப் பேணுதல் என்பது அதன் தலையங்கமாக இருந்தது.

★ ''ஆண்டவரே உயிருக்கும் மரணத்துக்கும் அதிகார கர்த்தர் நீரே''

* (ஞானா -16:13)

★ ''இயேசுக்கிறிஸ்துநாதரை மரித்தோரில் நின்று உயிர்ப்பித்தவர் உங்களிடத்தில் வாசமாயிருக்கின்ற தம்முடைய ஆவியின் நிமித்தம் மரணத்துக்கு ஏதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.'

* (உரோ 3:11)

தாயார் வந்தபோது இந்தச் சிந்தனைகள் தடைப்பட்டன. சம்மி இப்போது சிறிதுசிறிதாக உணவருந்தத் தொடங்கினாள் ஒருநாள் அந்த வைத்தியசாலையின் 'உவாட்டை' நோக்கிச் சென்றுகொண்டிருந்தான் அருள். அதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. சம்மியின் தந்தை அருளிடம் சென்று நடந்தவற்றைக் கூறியது மட்டுமன்றி மன்னிப்புக்கோரும் அளவுக்குச் சென்றுவிட்டார். சம்மியின் மனநிம்மதிக்காக ஒருமுறை அவளைத் தரிசிக்குமாறு வேண்டியதாகும்.

இரண்டு வாரங்களின் பின் சம்மி பூரண சுகத்தோடு வீடு சென்றாள். அருளுக்கும் சம்மிக்கும் திருமணம் நடந்தேறியது அன்று உயிர்த்த ஆண்டவரின் திருச்சுரூபம் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்தது. அருளும் சம்மியும் அங்கேகாணப்பட்டனர். ''ஆண்டவரே உயிருக்கும் மரணத்துக்கும் அதிகாரகர்த்தர் நீரே'' என்று மீண்டும் கண்ணீர் உகுத்தாள்.

---

## காவியா

### தேம்பாவணி

(சென்றவாரத் தொடர்ச்சி)

இயற்கை அழகை எடுத்துக் கூறும் முறை. மனம் படிந்த கொள்கைகளை அடுக்கிச் செப்பும் விதம். கடியவேண்டிய கருத்துக்களை முதலாக கொடுமொழி விலக்கி எடுத்தியம்பும் தன்மை, தமிழ்மீது கொண்டுள்ள தீராக்காதலின் உண்மை, உவமையணி, உருவகவணி, தற்குறிப்பணி, ஒளித்துக்காட்டணி போன்ற அலங்காரங்களைக் கையாளும் திறமை போன்ற பற்பல சிறப்பியல்புகள் தேம்பாவணியைக் கற்பவரைக் கவரும். பேரறம் இருந்தும், ஈரறமாகிய இல்லறத்தையும் துறவறத்தையும், ஓரறமாகப் பொருத்தி அதன் சிறப்பைத்தன் காவிய நாயகன் சூசையினதும், அவர் மனைவியும் இயேசுவின் தாயுமாகிய மரியாளினதும் ஒருங்கிணைந்த குடும்ப வாழ்வு மூலம் எடுத்துக் காட்டியது தமிழ் மண்ணுக்கும் தமிழர் பண்பாட்டுக்கும் வீரமாமுனிவர் ஆற்றிய அளப்பரிய சேவையாகும். இல்லறம் வேறு, துறவறம் வேறு என்றும், ஒன்றுடன் மற்றது இணைந்து ஒன்றாயிருக்க முடியாது (ஒருவேளை இல்லறம் துறவறத்திற்கு முன்படியாக அமையலாம்) என்றும் நம்புகின்ற தமிழ் மக்களின் அடிப்படைக் கொள்கையினை மாற்றிவைத்து இல்லறத்தில் துறவறம் அருள்புரியும் முறையையும், துறவறத்தில் இல்லறம் அன்பு செய்யும் தகைமையையும் கிறிஸ்தவம் அளிக்கும் புதுவாழ்வின் சிறப்புப் பண்பாக காப்பிய வழியில் காட்டிய பெருமை தேம்பாவணியின் ஆசிரியரையே சாரும்.

ஈரறம் பொருந்த ஓரறம்மேற்கொண்ட சூசையும் மரியும் சீமையோன் அறிவுரை கேட்டு, அவர், அன்புக்கட்டளைக்கு அடிபணிந்து திருமணத்தில் இணைந்தனர். அவர்கள் இல்லறவாழ்வை மேற்கொண்டபோது ஆதித்தாய் தந்தையை இறைவன் இணைத்து வைத்த திருமண முறைமை இவர்தம் திருமணத்துக்கு ஒப்பாமோவென நசரேத்தூர் மக்கள் பேசிக் கொள்ளும் அளவுக்கு இல்லறம் உயர்ந்தோங்கி நின்றது.

இருந்தும் சூசை (வளன்) திருமணம் செய்தும் ஒரு துறவி; மரியாள் மணக்கோலம் பூண்டாலும் மாறாத கன்னி. இருவரின் வாழ்வையும் சித்தரிக்கின்றார் ஆசிரியர்.

#### பாலிய அனுபவம்

சூசை பாலனாயிருந்தபோது நிகழ்ந்த ஒரு சந்திப்பு பின்பு, அவர் பூண்ட துறவற விரதத்தின் பொருளைப் புரிந்துகொள்ளப் பின்னணியாய் அமைகின்றது. சூசை பாலன் தன் பன்னிரண்டாம்வயதில் தவம் செய்ய விரும்பிக் காடு புகுந்தான். அங்கே ஓர் சோலைக்குள் நுழைந்தபோது சான்றோன் ஒருவர் தோன்றினார்.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

# பாவிகளையே அழைக்கவந்தேன்

நொறுங்குண்ட நெஞ்சினரைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டோர் விடுதலை பெறவும், குருடர்களுக்கு பார்வையை வெளிப்படுத்தவும் அடிமைகளுக்கு உரிமை வாழ் அளிக்கவுமே என்னை அனுப்பினுர் என்று இசையாஸ் இறைவாக்கினர் யேசுவைக் குறித்து கூறுவதைக் காண்கின்ருேம். அம் எவய மனத்தோர்க்கு ஈடேற்றத்தைப் பற்றியம் அதற்காகவே கடவுள் மனிதனுனர் என்ற நற்செய்தியை அறிவித்து பாவத்தாலும் அதன் விளைவாலும் நெஞ்சம் நொறுங்குண்டு பல துன்பங்களில் உழலும் மக்களை குணப்படுத்தி பாவம் என்னும சிறையில் இருந்து விடுதலையாக்கி அறியாமை என்னும் இருளில் சிக்குண்டோருக்கு அருள் ஒளியை வழங்கி பாவத்துக்கடிமையாகியுள்ள தம் மக்கள் அனைவரையு' தம் அன்பு மக்களுக்குரிய உரிமைப் பேற்றை பெற வழி செய்யவே யேசு வருவார் என்று இச்சொற்கள் சான்று பகர்கின்றன. ஆயக்காரர், பெரும் பாவிள் என்று வெறுத்தொதுக்கப்பட்டவர்களில் ஒருவரான லேவியை யேசு அழைத்தார். பாவப்படுகுழியினின்று புண்ணியம் என்னும் கரைக்கு இவர்களைச் சேர்க்கவே வந்தேன். மருத்துவன் உதவி யாருக்கு? நோயற்றவனுக்கன்று நோயுற்றவனுக்கே, உலகுக்கு நான் மருத்துவனுக வந்துள்ளேன். என் உதவி ஆன்ம நோயாளிகளாகிய பாவிகளுக்கே என்ற கருத்தில் நீதிமான்களையன்று பாவிகளையே அழைக்கவந்தேன் என்று கூறுகிருர். அத்தோடு ஊருக்குள் பெரும் பாவி என்றும் உலக இன்பங்களை அனுபவித்த ஒருத்தி தனது பிழைகளை உணர்ந்து பாவிகளைத் தேடி நடந்த யேசுவின் திருப்பாதங்கள்தான் தனக்கு தஞ்சம் என்றபோது அவளை மன்னித்து புதுவாழ்வு அளித்தார். இவ்வாறு யேசு பாவிகளை சத்திய வழியில் அழைத்தது போல் நாமும் பிழைகளை உணர்ந்து அவர் வழிசெல்வோம்.

யோ. வசந்தி
பற்றிக்ஸ் ரோட்,
யாழ்ப்பாணம்.

---

அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை
7-4-1989.

'அன்பு இளம் உள்ளங்களுக்கு'

சங்கீதம் 130/1—2 வசனங்களை உங்களோடு சேர்ந்து நினைவு கூர விரும்புகின்றேன:

"ஆண்டவரே என் இதயம் இறுமாப்பு கொள்ளவில்லை. பெரிய காரியங்களையோ என் ஆற்றலுக்கு மிஞ்சின காரியங்களையோ நான் தேடவில்லை.
மாருக, தாயின் மடியில் குழந்தையிருப்பதுபோல், என்னுள் என் ஆன்மா அமைதியுடன் இருக்கும்படி பார்த்துக் கொண்டேன்; குழந்தையைப்போல் என் உள்ளம் அமைதியாய் இருக்கிறது."



எந்த ஒரு ஆன்மாவும் தனியனுக அமைதி பெற இயலாது. இறைவனின் இணைப்பிலே, அவரிலே எம்மை இழப்பதிலே தான் நாம் உண்மையான அமைதியை, உளப்பூரிப்பைப் பெற முடியும். எம்மை நாம் எவ்வளவிற்கு இறைவனில் இழக்கின்றோமோ அவ்வளவிற்கு எம்மை நாம் நிறைவாகப் பெற்றுக் கொள்கிறோம்.

நல்வாழ்த்துக்கள்.

அன்பு நெஞ்சன் வி. பி.

---

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு-36

குருசுமுத்து:—என்ன தம்பி கூட்டம்?

அடைக்கலம்:—அண்ணை அந்த சொத்தைச் சேத்தவரைப் பார்க்க எவரும் முன்வராம தெருவில விட்டு வழியில செத்தவற்ற சொத்துக்காக சண்டை நடக்குதண்ணை.

குருசு:—பணத்திற்காக பிணத்தை தோண்டிற காலத்தில பாசத்துக்கு என்ன விலை எண்டு கேட்ட சனம் செத்த பின் சொத்துக்கு அலைய கோட்டுக்கு இறைக்கவா இத்தனை கூட்டம்?

அடைக்கலம்:—அண்ணை இல்லாதங்கள் அடிபட்டா பரவாயில்லை. இருக்கிறதுகள் எல்லோ மோதுதுகள்?

குருசு:—இருக்கிறதுகளுக்குத்தான் சேர்க்க வேணும் எண்ட அவாவில அரியுதுகள், பெரியவர்களை அலைய விட்டு அவையளின்ர சொத்தில் மட்டும் சொந்தம் கொண்டாடும் ஜீவன்கள் இதே நிலைதான். பின்னுக்கு தங்களுக்கும் எண்டு தெரியாது போல, இது எப்ப திருந்துமோ?

---

## உலகம்

இளைஞர்கள் உலகம் இது தனி உலகம்—அங்கே
காவியம் பாடும் புது உலகம்.
கவிஞர்கள் பாடும் கவியுலகம்—இங்கே
காதலர் கூடும் கவியுலகம்.
நம்மவர் வாழ்ந்த நல்லுலகம்—இப்போ.
நயவஞ்சகர் வாழும் நாயுலகம்.
பழம் கதைகளைப் பார்த்தால் அது பாலுலகம்—இப்போ
பார்வையில் பார்த்தால் இருட்டுலகம்.
வேதனை தீர்க்கும் வெள்ளை உலகம்—இப்போ
வெதும்பிய புண்ணில் வேல் பாய்ச்சும் உலகம்
கிறிஸ்தவர் வாழ்ந்த கிறிஸ்துலகம்—இப்போ
இன்சல்கள் கூடும் கிறிட்ட உலகம்.

—மரியாம் பிள்ளை ரூபின்

---

## இப்படி ஏன்?

சிந்தை சிதறடிக்கப்படவே,
சித்திரவதைக் குள்ளாகின்ருன்
கட்டியடிக்கப்படவே கசையடி
பட்டு,
கால், கை இழந்து, கதறு
கின்ருன்.
குற்றம் அறியா குவலயம்
வாழ் மகன்,
குமுறுகின்ருன். குருதி சிந்து
கின்ருன்.
இரக்கமற்ற இளம் உள்ளமே,
இதனைச் செய்ய இசைவதெப்
படி?
இப்படி ஏன்? என்ருல்
இறுமாப்பு ஏன் என்பார்.

அன்புக் குழந்தை
முருங்கன்.

---

## முன்னேற்றம்

ஒருவர்: என்னப்பா பல பேரோட காலப் பிடிச்சுத் திருஞ்சியே.
எப்படியடா இப்படி முன்னேறிஞய்?

மற்றவர்: பெரிசா ஒண்டுமில்லீங்க, இவ்வளவு காலமும் காலப் பிடிச்சன் இப்ப நான் அவங்களன்ற வாலைப் பிடிக்கிறன்.

ஒருவர்: ? ? ?...

★

"கண்ணாலே விண்ணைப்
பார்த்தேன்
விளங்கவில்லை ஒன்றும்
கண்ணாலே என்னைப்
பார்த்தேன்
புரிந்ததடா புதுமை பல."

—சுதா.

---



"குடும்பம் ஒரு கதம்பம் பகுதியை மீண்டும் விறுவிறுப்பாக்குங்கள்" என்று ஒரு கடிதம் வந்துள்ளது

"என்ன நல்ல தோழன் புத்தகம் கிடைத்து விட்டதா" என்று ஒருவர் வாய் விட்டே கேட்டு விட்டார்.

எங்கள் கட்டுரைகள் பிரசுரிக்கப்படவில்லை என்று முறைபட்டனர் சிலர்.

(1) உங்கள் கட்டுரைகளை எமக்கு தொடர்ந்து அனுப்புங்கள் பிரசுரிக்கிறோம்.

(2) எங்கள் ஆக்கங்களுடன் சில தொகுப்புக்களையும் தேவை கருதித் தருகிறோம் வாசித்துப் பயனடையுங்கள்.

(3) "திருமண வாழ்வு" என்ற ஒரு தொடர் பகுதியையும் மணமான வாழ்விற்கு மணியான யோசனைகள் என்ற பகுதியையும் தொடர்ந்து தருகிறோம் பயனடையுங்கள். உங்கள் கருத்துக்களையும் எழுதுங்கள்.

— அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

★ ★

## இல்லறம் என்னும் இல்லப்பூங்காவின் தலைவாசல் நல்ல மனைவியே

பெண்கள் உலகத்தின் கண்கள். பெண்ணாய் பிறந்து விட்டதோடு மட்டும் தங்கள் கடமைமுடிந்து விட்டது என்று கருதிவிடாது அதன் பெருமை விளங்க வாழ்வதே சிறப்பு.

ஒருபெண் பெற்றவர்களின் கைகளுக்குள் இருக்கும் வரையில் அவர்களுக்கு கட்டுப்பட்டவள். அவர்களின் கையைவிட்டுக் கடந்து அதாவது ஒருவனுக்கு மாலையிட்டு 'மனைவி' என்னும் அந்த உன்னத ஸ்தானத்தை என்று அடைகிருளோ அன்று தொட்டு அவள் கணவனுக்குக் கட்டுப்பட்டவளாகின்ருள். இன்பத்திலும் சரி, எத்தனை பெரிய துன்பத்திலும் சரி, கைப்பிடித்தவனேடு சரிபங்கெடுத்து மனம் கோணுது முகம் சுளிக்காது காலமெல்லாம் அவன்காலடியே சுவர்க்கம் என எண்ணி, அவனேடு வாழும் வாழ்வையே சுவன இன்பம் எனமனதில் உறுதியாகக் கொண்டு அவனை மதித்து வாழ்பவளே உத்தம மனைவி.

இல்லறம் என்னும் இன்பப் பூங்காவின் தலைவாசல் நல்ல மனைவியே, வசதியான குடும்பத்தில் பிறந்திருக்கலாம், செல்வச்செருக்கில் வளர்ந்திருக்கலாம். ஆனல் இதற்கு மாருகப்புகுந்த இடம் எத்தனை எளிமையின் சின்னமாக விளங்கிய போதிலும் அதுவே பெண்ணுக்குச் சுவர்க்கம். கணவனே கண்கண்ட தெய்வம். அக்காலப் பெண்கள் கணவனைத் தெய்வம் என்று மதித்துத்தான் வாழ்ந்தார்கள்- அதற்குமாருக இக்காலப்பெண்கள் கட்டிய கணவனைத்துச்சமென மதித்து, நினைத்து வாழ்கின்ருர்கள். கல்வியிலும் தொழிற் துறையிலும் ஆண்களுக்குச் சரிநிகராக முன்னேறிநிற்பதே பெண்களின் இத்தகைய மாறுதலுக்குக் காரணமாகும். கணவனுக்கு மனைவி கட்டுப்பட்டுவாழ்ந்த காலம்மாறி இருக்கிறதென்ருல் அதற்குப் பெண்களின் நாகரீகத்தையும் மற்றுமொரு காரணமாகக் கொள்ளலாம். காரணம், நாகரீகமான இக்காலத்தில் ஒருசில பெண்கள் சமையல் வேலைகளையும், குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்புக்களையும் கணவனிடம் ஒப்படைத்து விட்டு சினிமா என்றும், கடற்கரை என்றும் உல்லாசப் பாவைகளாகப் பறவைகளாகப் பவனி வருகிருர்கள்.

பெண்ணானவள் இல்லறத்தைப் பொறுப்புணர்வோடு நடத்துவதிலும் கணவனுக்குக் கட்டுப்பட்டு வாழ்வதிலுமிருந்தே அவள் ஓர் உத்தம மனைவி என்பது புலனுகின்றது. கணவனை இதயக்கோவிலில் தெய்வமாக நிறுத்திப்பக்தியோடு பூஜித்து வாழநம் சமூகத்திலுள்ள ஒவ்வொரு பெண்ணும் பழகிக்கொண்டால் அது ஒன்றே பெண்குலத்தின் பெருமையையும், 'நல்லமனைவி' என்னும் அழியாப்புகழையும் நிலைநாட்டப் போதுமானது.

ம. செல்வநாயகம், சில்லாலை.

# அருள்வாக்கு அறிவோம்

திருமறைப்பணி நிலையம்
த. பெ. இல. 2.
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## சிறிய இறைவாக்கினர்-17

### மிக்கேயாஸ் - 2

மீக்காவின் இறைவாக்குரை முதன்மையாக யூதாவுக்கே உரியது. நூலின் பெரும்பகுதி யூதாவையே கண்டிப்பதாக உள்ளது. அதேவேளையில் இஸ்ராயேல் மீதும் அக்கறை செலுத்துகிறார். குறிப்பாக சமாரியாவுக்கு வரவிருக்கும் அழிவை முன்னறிவிக்கிறார். அங்கு இடம்பெறும் சிலை வழிபாட்டைக் கண்டித்து எச்சரிக்கிறார். அவர் கூறியபடி கி. மு. 722 ல் சமாரியா வீழ்ச்சியடைந்தது.

ஆமோஸ் இறைவாக்கினர் இஸ்ராயேலுக்கு ஆற்றிய பணியையே மீக்கா இறைவாக்கினர் யூதாவுக்குச் செய்தார் என்று அவரது நூலிலிருந்து அறியலாம். ஆமோசைப்போல் இவரும் ஒளிவு மறைவு இன்றிப்பேசினார். சமூக அநீதிகளைக் கண்டித்தார். ஆமோஸ் இஸ்ராயேலில் கண்ட அதே சமய சமூகச்சிதைவுகள் யூதாவிலும் இடம் பெறுவதைக் கண்டார். இதற்காக இறைவன் தீர்ப்பிடுவார் எனக்கடுமையாக எச்சரிக்கிறார். இறைவனின் தண்டனையை எடுத்துக் கூறினாலும் வரவிருக்கும் மெசியாவின் காலத்தைப் பற்றிக் கூறுகின்றார். மெசியா யூதாவையட்டுமன்றி உலகநாடுகள் அனைத்தையும் ஆளுவார் என அறிவித்தார்.

இந்நூல் கருத்தின் அடிப்படையில் அமைக்கப் பெற்றிருப்பது சிறப்பான ஓர் அம்சமாகும். கேடுகளையும், அழிவையும் அறிவிக்கும் அதேவேளையில் மீட்பை அறிவிக்கும் வாக்குறுதிகளும் சமனான விதத்தில் மாறி, மாறி வருகின்றன. இந்நூலின் நடை எளியது. சாதாரண கிராமப்புற மக்களின் நடையில் எழுதுகிறார்.

கி. சா. பங்கிராஸ்

அறிந்துகொள்ளுங்கள் 72

## குருக்களின் அபிஷேகம்

லேவியராகமம் முழுவதும் சட்டங்களைக் கொண்டது. சில பகுதிகள் ஆரோனுடையவும் அவருடைய புதல்வர்களுடையவும் திருநிலைப்படுத்துதல் பற்றிக் கூறுகின்றது.

இஸ்ராயேல் இனத்தில் லேவி குலத்தினர் குருக்களுக்குரிய அலுவல்களைச் செய்யத் தொடங்கினர். இது எப்படி ஆரம்பமாகியது என்பது தெளிவாகத் தெரியவில்லை. பாலையில் லேவியரின் பிரமாணிக்கத்திற்குப் பரிசாக குருக்களுக்குரிய அலுவல் அளிக்கப்பட்டது. ஆரோனின் ஆண்வழித்தோன்றல்கள் குருக்களாகவும், லேவியின் மற்ற இனத்தைச் சார்ந்தவர்கள் குருக்களின் ஊழியராகவும் அமைக்கப்பட்டனர். எனவே வழிபாட்டுப் பணியாளர் அனைவரும் லேவியினத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டனர். இப்பணியாட்களை லேவியர், குருக்கள், பெரியகுரு என மூன்றாகப் பிரித்தனர். லேவியர் குருக்கள் அல்லர் பெரிய குருப்பதவி ஆரோனுக்குரியது. ஆரோனின் தலைப்பேறான ஆண் மக்கள் பெரிய குருப்பதவியை வகித்தனர். லேவியர் கூடார அல்லது ஆலயப் புறமுற்றத்திலும், குருக்கள் தூயகத்துள்ளும், பெரிய குரு அதிதூயகத்துள்ளும் பணி புரிந்தனர்.

லேவியராகமத்தில் (8: 11-36) பகுதியில் குரு நிலைப்படுத்தப்படும் சடங்கு கூறப்படுகிறது. யாத் 29: 1 37லும் பார்க்கலாம் திருநிலைப்படுத்தப்படுபவர் தண்ணீரால் கழுவப்பட்டு அவருக்கு குருத்துவ ஆடை அணிவிக்கப்பட்டது. பின் அவருடைய தலையின்மேல் அபிஷேகத் தைலம் வார்க்கப்பட்டது (லே 8: 6—12) அதன் பின் தொடர்ச்சியாக பலிகள் செலுத்தப்பட்டன. பலிப்பொருளின் இரத்தம் அவரின் வலக்காது மடல், வலக்கைப் பெருவிரல் வலக்கால் பெருவிரல் போன்ற உறுப்புக்களில் தடவப்படும் (லேவி. 8: 23) இச்சடங்கு முடிந்த பின் தைலமும் இரத்தமும் அவர்கள் மேலும் ஆடைகள் மீதும் தெளிக்கப்பட்டது. (லே 3: 30) இதன் பின் திருநிலைப்படுத்தப்பட்டவர் இறைவனுக்கு காணிக்கை செலுத்துவார். முழுச்சடங்கும் பலியுணவுடன் முடிவடையும். இத்திருநிலைப்படுத்தும் வழிப்பாட்டுச்சடங்கு ஏழுநாட்கள் நடைபெற்றன.

இரத்தம் தெளித்தல் ஒருவர் தம்மை இறைவனுக்கு அர்ப்பணித்ததைக் குறிக்கும், எண்ணெய் பூசுதல் திருநிலைப்படுத்தப்பட்டவர் இறை சேவைக்கு ஒதுக்கப்படுதலை உணர்த்துகிறது. திரு உடை அணிதல் மூலம் அவரிடம் இறைவழிபாடு ஒப்படைக்கப்படுகிறது.

இச்சடங்கு முறை பாலை வாழ்க்கைச் சூழலில் கூறப்பட்டாலும் இது நாடுகடத்தப்பட்டுத் திரும்பியபின் ஜெருசலேம் ஆலய வழக்கில் இருந்த சடங்கு முறைகளே என அறிஞர் கூறுகின்றனர். எண்ணெய் பூசுதல் பிற்காலத்தைச் சேர்ந்த சடங்குமுறை, அதேவேளை லேவியராகமம் குருக்கள் பாரம்பரியத்தைச் சேர்ந்தது.

இ. ம, ஜெயசீலன்

## பழமொழி ஆகமமும் புதுமொழியும்.

வாசக நேயர்களே!

இறைவன் நம்மை ஒவ்வொருவரிலும் வேறுபாடாக வித்தியாசமாகப் படைத்திருக்கிறார். நமது முகத்தை எடுத்துக்கொள்ளுங்களேன். உலகிலே யாருக்கும் இல்லாத ஒரு புதிய உருவம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஏன்? நமது பெருவிரலை உற்றுநோக்குங்களேன். உலகிலே எவருக்கும் கிறப்படாத வித்தியாசமான ஒரு கோடு நமது ½ அங்குலக் கட்டை விரலிலே வரையப்பட்டிருக்கின்றது. ஆம். இறைவன் ''போறணையில்'' போட்டு எடுக்கப்படும் ''ரொட்டிகளை'' போல எம்மை ஒரே அச்சில் வார்க்கவில்லை. அனைத்து மனிதரையும் வித்தியாசமாக அக்கறை எடுத்து படைத்திருக்கிறார்.

இதை நாம் சற்று உணர்ந்தால் ''எனக்கு நிகர் எவனுமேயில்லை'' என்று தம்பட்டம் அடித்துக் கூறலாம்.

நாம் இறைவனின் சாயலாக- அவரின் விசேஷித்த படைப்பாக இருந்தால் எமமை அழிவுக்கு விட்டுவிடுவாரா என்ன?

திருநூல் 15/24 ல் ''அடி நரகத்தினின்று விலகும்படி வாழ்வுதரும் பாதை கற்றவன் முன் உள்ளது'' இறைவன் கொடுத்த ஆற்றலை தகுந்த முறையில் பயன்படுத்தி அவரின் சாயலோடு நாமும் உருமாறவேண்டும். என்ற இறை வார்த்தைக்கு ஒத்துழைக்கிறார் நம் முன்னோர்.

''புத்தியுள்ள பிள்ளைபிழைக்கும், அறிவு சுற்றம் அனைத்தையும் காக்கும் கருவி'' என்கிறார்.

இன்று எம் மத்தியிலே காணி, நிலம், வீடு, பொருள் தேடவேண்டும். யார் எக்கேடு கெட்டாலும் நமக்கென்ன நானும் என் குடும்பமும் நன்றாய் வாழந்தால் போதும் என்ற வெறிபிடித்து சுற்றம் சூழலையோ, ஏன் சொந்தச் சகோதார்களையோ மிதித்து வாழ்ந்து அதிலே ஒரு மதிப்பு கௌரவம் பாராட்டும் மக்கள் எம் மத்தியிலே இல்லையா? இப்படிப்பட்ட திமிர்பிடித்தலையும் எம் மக்களை நோக்கி இடித்துரைக்கிறார் இறைவாக்கினர்

15/25 -ல் ''அகங்காரிகளின் வீட்டை ஆண்டவர் இடித்தழிப்பார் விதவையின் காணி எல்லைகளையும் உறுதிப்படுத்துவார்''

இப்படி அயலவர்களின் அழிவிலே விழித்தெழ நினைக்கும் எம்மவரைப் பார்த்து எம் முன்னோர் கூறுகிறார்கள் இப்படி- ''ஆணவம் அழிவுக்கு ஆணிவேர்'' என்றும் ''கோபம் குடியை அழிக்கும்'' என்ற இரு வசனங்களில் மனம் வருந்த- திருந்த எம்மை அழைக்கிறார்கள்.

### வாரம் ஒரு சிந்தனை

''வாழ்க்கையின் உண்மையான குறிக்கோள் அழிவில்லாத வாழ்க்கையை தெளிவாக அறிந்து கொள்வது ஆகும்''

உங்கள் அன்பன்
எஸ். ஏ நாதர்.

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 5<br>சுடர்: 14 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

### வாரம் ஒரு வார்த்தை

வெல்ல முடியாத சோதனைக்கு உள்ளாகும்படி உங்களை விடமாட்டார்.

1 கொரி 10: 13

### கனிந்த பார்வை

அன்பின் ''காவலன் கண்மணிகள்'' அமைப்பாளர்
'அன்பு விழி' அண்ணா அவர்கட்கு:

நான் பாதுகாவலனில் வெளிவரும் ''காவலன் கண்மணிகள்'' பகுதியை வாசித்து மகிழ்வதுண்டு. நெடுநாளாக நான் இப்பதியில் அங்கத்தவனாக சேர வேண்டுமென்று ஒரு ஆசை கொண்டுள்ளேன். இப்பகுதியில் சேருவதற்கான விதிமுறைகள் எனக்குத் தெரியாது. தயவு செய்து அவற்றை எனக்குத் தெரிவிப்பீர்களாக?...

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள தம்பி
D. றேய் றேச்
மன்னார்.

★ உமது முழுப்பெயர்; படிக்கும் பாடசாலை; கற்கும் ஆண்டு, வீட்டு முகவரி போன்ற விபரங்களைக் குறித்து அனுப்பவும்.

★ ★ ★

### பேசும் விழி:

அன்புக் கண்மணிகாள்,

குழந்தை யேசுவின் ஆசிகள் என்றும் உங்களுள் நிறைவதாக.

அஞ்சல் வழித் தாமதத்தால் பரிசுப்பணம் உரிய நேரத்துக்கு, உரியவரைச் சென்றடையத் தவறி விடுகிறது. தயவு செய்து தாமதத்தைத் தாங்கிக் கொள்ளுங்கள். பரிசு நிச்சயம் கிடைக்கும்.

விடுமுறை நாட்களை—சுய
விதிமுறை நாட்களாக மாற்றுங்கள்.
வீதியளப்பதை. வீணே கழிப்பதை
விவேகத்துடன் விலக்கிக் கொள்ளுங்கள்.
விவிலியமும் திருக்குறளையும்
பல முறை படியுங்கள். அதில் பரிசுப் போட்டி 1.
அடுத்தவாரம் வரும். அதனை ஆவலுடன் காத்திருங்கள்.

என்றும் உங்கள்
அன்பின்
அன்பு விழி.

### நண்பரே !...

அகிம்சையை வளர்த்திடு.
அன்பைக் கொடுத்திடு.
அறத்தின் வழி நடந்திடு.
அயலாரை மதித்திடு.

தன் நலத்தைத் தேடாதே.
தற்பெருமையில் நில்லாதே.
தவிக்க வைத்து வாழாதே.
தனி இன்பம் நாடாதே.

நன்மையைச் செய்திடு.
நாணிலத்தை வளர்த்திடு.
நல்லவர்களை வாழவிடு.
நல்லவனாய் வாழ்ந்திடு.

அன்புக் குழந்தை
முருங்கன்.
அங்கத்துவ எண்—56

# பொதுநிலையினர் கருத்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்போட்டி, கட்டுரைப் போட்டி, நாடகப்போட்டிகள் கொத்தணி, மாவட்டரீதியாக நடத்திப் பரிசுகள் வழங்குவது.

2. பொது நிலயினர் கடமைகளை உணர்ந்து செயற்பட ஊக்குவிப்புக் கூட்டங்களை, வழிபாடுகளைத் தொடர்வது.

3. ஒவ்வொரு பங்கிலும் பங்குத்தந்தையர்களின் அனுசரணையோடு பொதுநிலையினர் சிறப்பாகப் பக்திச்சபைகள் அப்போஸ்தலிக்க பணிகளில் ஆர்வங் கொண்டு இறையரசைக் கட்டி எழுப்ப பொதுநிலையினர் கழகங்களை அமைப்பது.

4 மன்னார் மறைமாவட்ட பொதுநிலயினர் ஆணைக்குழுவைக் கூட்டுவது சம்பந்தமாக பங்குத்தந்தையர்களிடமிருந்தும் ஆயரிடமிருந்தும் பிரதிநிதிகளை அழைத்து புதிய நிர்வாக சபையை உருவாக்கல்.

5. தாழ்வுபாடு, பள்ளிமுனை, ஆட்காட்டிவெளி, முருங்கன், தலைமன்னார், அடம்பன், செட்டிகுளம் ஆகிய பங்குகளில் பொதுநிலயினர் கூட்டங்கள் நிகழ்த்தியது போன்று மற்றும் பங்குகளிலும் நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளல்.

6. ஒவ்வொருபங்கிலுமிருந்து சிறு அப். குழுக்கள் மாதமொருமுறை இவ்வித தியான வழிபாடுகளில் இணைந்து செயற்படவும், ஐக்கியத்தை வளர்க்கவும் மன்னார் மறைவட்ட விசுவாசிகளுக்கு புத்துயிர் ஊட்டவும் வழிசெய்தல்.

மேற்படி தீர்மானங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. மேற்படி மறைவட்ட முதல்வர் இச்சிறிய விசேட குழுவினர்க்குத் தம் நன்றியைக் கூறினார்கள். சகோதரிகள் செல்வி லூமினா, செல்விசாந்தி, செல்வி மெறினா, செல்வி அந்திரேஸ்பிள்ளை திருமதி றெஜினா இராமலிங்கம் சகோதரர்கள் திரு பெஞ்சமின் திரு. ம. சவிரி திரு. A. அந்தோனிமுத்து ஆகியோரின் அபராஉழைப்பைப் பெரிதும் பாராட்டினார்கள்.

V. A. லெம்பேட்

---

## எழுதிச் செபியுங்கள் போட்டி - 22

"யோசவ் வாஸ் முனிவரைப் புனிதராக்கத் தேவையான புதுமை நிறைவேற" ஒரு செபம் எழுதி.. 7-5-89 இற்கு முன் பாதுகாவலன் த. பெ. இல—2 யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். சிறந்த செபத்துக்கு பரிசு ரூபா 25 - அடுத்த போட்டியும் பரிசு பெறுபவர் பெயரும் 12—5—89 இல் வெளிவரும்.

எழுதிச் செபியுங்கள் போட்டி—21

**பரிசு பெறும் செபம்**

அருட் கொடைகளை வழங்குகின்ற அன்புத் தந்தையே!

நீர் எமக்கு கல்வி என்னும் சிறப்பான கொடையை அளித்து, அதன்மூலம் எம் வாழ்வை நல்ல முறையில் அமைத்து, எதிர்காலத்தில் சிறந்த சமுதாயத் தலைவர்களை உருவாக்க வழிகாட்டியமைக்காக உமக்கு நன்றி கூறுகிறோம். பல்வேறு சூழ்நிலையினாலும் எமது உரிமைக்கான போராட்டத்தினாலும் எமக்குரிய சொத்துக்கள் உடமைகள், சுதந்திரம் எல்லாம் பறிக்கப் படுகின்றது. இந்த வகையில் எங்களிடமிருந்து பறிக்கமுடியாத அழிக்கமுடியாத கல்வி என்ற கொடைகூட நாட்டிற் காணப்படுகின்ற நெருக்கடியினாலும், இடையூறுகளினாலும் தடைசெய்யப் படுகின்றது. போராட்டத்துக்கான சூழ்நிலையினை காரணங்காட்டி சில தீய சக்திகளினால் வழிகாட்டிகளான ஆசிரியர்களும், பாடசாலைச் சொத்துக்களும் கல்வி ஆண்டுக்குரிய பாடசாலை நாட்களும் தேவையற்ற விதத்தில அழித்து ஒழிக்கப்படுகின்றன. இவ்வாறு நாம் கல்வி ஆண்டிலே எமது கல்வியைத் தொடரத் தடையாக இருக்கின்ற அனைத்து சக்திகளையும உம் கருணையால் மனம்மாற்றி கல்வியின முக்கியத்துவத்தையும், மாணவச் செல்வங்களின் எதிர்கால வாழ்வையும் அவர்கள் உணர்ந்து செயற்பட வரம் தாரும். மேலும் மாணவர்களாக அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் தமது அழைப்பின் பொறுப்பினை உணர்ந்து கல்வி என்ற சிறப்பான கொடையை அழியாத சொத்தை உரியமுறையில் பெற்று சமுதாயத்தின் தலைவர்களாக சிறந்த வழிகாட்டிகளாக வாழ ஆவியின் கொடைகளைப் பொழிந்தருளும்.

—ஆமென்

பரிசுபெறும் நற்பேறுளர்

அ, மோசேஸ்

புனித லூர்து மாதா கோவிலடி,

தும்பளை, பருத்தித்துறை.

பாராட்டுப் பெறுவோர்

செ. ஜெவ்சலா, ம. றெஜீ றவிசா, எஸ். ஆர் இராசநாயகி, வே. பிரான்சிஸ் பேரின்பநாயகம், அ. மேரிவாகினி, யூலியானா. பிறின்ஸ், ம. நேசமலர், அ இரஞ்சிதமலர், எம். ஆர். கே. ரட்ணராஜா, சலமோன் சகாயமலர், பொன் றோஸ் சீமான் சேவியர், ம. செ. றேுகினி, நீக்கிலான் பிரான்சிஸ்கம்மா, ம. தயாளதன், ரி. மோகன் ராஜா, செலஸ்ரீன ஜெனிற்றவினி, பி, சூசைப்பிள்ளை, செ இ. துஷ்யந்தி, அ. லூசியா, பே. மிரியம் ஷிரோமி, செல்வி மேரி விறிசிற்ற மரியாமபிள்ளை, அருட்பிரகாசம் ஜெறுளின் ஜொய்சி, யோசப் நிக்லஸ் ஜெசான், பி. வசந்தா குருஸ், செலவநாயகம் மரியநாயகம, ஆ. செல்வி மரிய நாயகி (சாந்தி), செ. மெறின் பீரிஸ், வி. மேரி பற்றீசியா, செ. மேரி அன்ரனிற்ற, செல்வி மேரிமாலதி ஞானரெத்தினம்.

---

## அறிவித்தல்

1989 ஆம் ஆண்டிற்கான 3வது அகில இலங்கை தேசிய வேதாகம விழுவினாடைப்போட்டி.

திருத்தம்

20 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான மனப்பாடப் பகுதி.

| | | |
|---|---|---|
| யாத்திராகமம | 15: 2 | மத. 5: 11-12 |
| யோவான ஆகமம | 15: 8-9 | மத். 5: 23-24 |
| இசையாஸ் | 37: 23 | அருள. 10: 26-27 |
| யோவேல் | 2: 16 | உரோ. 5: 10 |
| சாலமோனின் ஞானம் | 16: 26 | எபேசி. 2: 14 |
| சராக் | 6, 7-8 | |
| சீராக் | 5, 1-2 | |

மறைக்கல்வி நிலயம்

யாழ்ப்பாணம்.

---

### விண்ணக வாழ்வின் 1-ம் ஆண்டு நிறைவு



சூ. மேரிப்பிள்ளை

பிறப்பு: 07-05-1922 இறப்பு: 09-04-1988

ஆண்டு ஒன்று மறைந்தாலும்
அன்பு முகம் மறக்கவில்லை
ஆண்டவன் திருவடியில் நீர்வாழ
அனுதினமும் வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், உற்றார், உறவினர்
நவாலி தெற்கு
நவாலி. A/64

---

### மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



எலிசபேத் சந்தியாப்பிள்ளை

மலர்வு 04-02-1902 உதிர்வு 14-04-1986

அன்னாரின் ஆத்ம சாந்தி திருப்பலி சித்திரைத் திங்கள் பதினைன்காம் நாள் வெள்ளி மாலை ஐந்து மணிக்கு நாரந்தனை திரு இருதயநாதர் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

A/66

---

## கலை நிலா....

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சூசை:- நான் தவம் செய்ய அம்மலைக்குச் செல்கிறேன்

சான்றோன்:- போரில் புறங்காட்டி ஓடக்கூடாது.

சூசை:- மக்களிடையே வாழ்ந்தால் ஆசைக்கு அணை போட முடியாது.

சான்றோன்:- செம்பொன்னை உருக்கினால் ஒளி பெறுவது போல், சோதனையை எதிர்த்து நிற்பதில் தான் பெருமை உண்டு.

சூசை:- காட்டில் தவம் செய்வதே ஆசையை அகற்றுவதற்கு வழி என்பர் ஆன்றோர்.

சான்றோன்:- வனம் செல்ல ஒரு நாள் மனத்துணிவே போதும். ஆனல் நீண்டபோரில் வெற்றிபெற, மனஉறுதி வேண்டும்.

சூசை:- துறவறமே மேன்மையானது.

சான்றோன்:- தான் மட்டும் அறவழியில் நடப்பதிலும் அயலவரையும் நல்வழியில் நடப்பிப்பதே அதிலும் உயர்ந்தது.

சூசை:- பிறர் வீட்டுத்தீயை அணைக்கப்போய் தன்வீடு பற்றி எரிய விட்டால்?

சான்றோன்:- தீதில்லா இடம் இல்லை. குற்றமின்றி ஒழுகுவது மனத்தைப் பொறுத்தது.

சூசை:- இல்லறத்திலும் துறவறத்திலும் ஏது சிறந்தது.

சான்றோன்:- துறவறமே சிறப்புடையதாயினும், ஈரறத்தையும் இணைத்து நடத்தும் வாழ்க்கையே ஒப்பற்ற அறமாகும். அதில் அன்பு, அருள் உணர்வு, ஊக்கம், பொறுமை, ஈகை முதலிய நற்குணங்கள் பொலிவு பெறும் — மற்றவர்கள் "கான் வளர்" தவத்தைத் செய்யட்டும். அத்தவத்தின் சிறப்பை நகரில் காட்டுதல் உன் கடமையாகும்.

தான் உரையாடியது இறைவனின் தூதுவனுடன் என்பது சூசைக்கு விளங்கி விட்டது. சான்றோன் மின்னலைப் போல் மறைந்ததும் அச்சந்திப்பிலிருந்து துறவறப் புண்ணியங்களை உலகின் மத்தியிலிருந்து பிறர்பயன்பெறக் காட்டிவாழ்தலே சிறந்தது என்ற எண்ணம் சூசையின் மனத்தில் சிறுவயதில் பதிந்துவிட்டது.

(தொடரும்)

---

### வானக இன்பம் 1ம் ஆண்டு நிறைவு



பிளசம் வேஜினி

தோற்றம்: 12—05—1964 மறைவு: 03—04—1988

ஓராண்டு காலம் ஓடி மறைந்தாலும்
உத்தமியே உன் பெயரை உன்னாத
நேரம் உண்டோ
பாங்கான பொன்மலரே பரமனடி
இணைந்தாயே
கர்த்தனடி சேர்ந்த கண்மணியே
காவியமே
இன்பமுடன் வான்வீட்டில்
இணைந்திடவே வேண்டுகிறேன்

இறைவா உமது அடியாளாகிய பிளசம் வேஜினியின் ஓராண்டு நிறைவான இந்நாளில் அவரின் குறைகளை மன்னித்து அவரை உம்முடன் வான்வீட்டில், சேர்த்தருள வேண்டும் என்று உம்மை மன்றாடுகின்றோம்.


இவரின் ஆன்ம சாந்திக்காக மாரீசன் கூடல் புனித சுயித்தார் ஆலயத்தில் 8-4-89 (சனிக்கிழமை) அன்று மாலை 5-30 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும், அனைவரையும் இதில் பங்குபற்றுமாறு வேண்டுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்

A/65

---

### விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவஞ்சலி



திரு. யோசேப் தோமாஸ்

மலர்வு: 23-12-1916 உதிர்வு: 13-04-1988

"மண்ணகத்தில் இறப்பு. விண்ணகத்தில் பிறப்பு" ஆண்டொன்று போயும் உன் அன்புருவம் மறையாமலும் உன் புகழ் மங்காமல் அலை அலையாய் எம் இதயங்களில் பாயுதையா.

இவரது ஆன்மசாந்திக்காக கொழும்பு - செக்கடித்தெரு அன்னை வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதா, நெடுந்தீவு புனித யுவானியார் ஆலயங்களில் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரது பிரிவால் தினமும் வாடும்
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்,
10- ஆம் வட்டாரம்
நெடுந்தீவு A/58

பாதுகாவலன்
PATHUKAVALAN

# மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் அறிவித்தல்

மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் கடந்த கால போகம் 88/89இல் கிட்டதட்ட 7000விவசாயிகளுக்குவிதைநெல், நெல்உரம், மேட்டுமரம், மிளகாய் உரம், விதைப் பொருட்கள், நடுகைப் பொருட்கள் போன்றவற்றை அவர்களின் தேவைக் கேற்ப விநியோகித்து வந்ததை யாவரும் அறிவீர்கள் நாம் ஏற்கெனவே உங்களுக்கு அறிவித்தது போல் அறுவடையின்பின் ஒரு சிறுபகுதிப் பணத்தை ம.து.ம.ச. சுழற்சி நிவாரண நிதிக்கு வழங்குமாறு கோரியிருந்தோம்.

இதற்கு ஏற்ப நிலவிய வறட்சியை கருத்திற்கொண்டும், எவ்வகையில் உதவிகள் பெற்று இருப்பினும், ரூபா 25/ஐ சுழற்சி நிவாரணநிதிக்கீழ் குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட உத்தியோகஸ்தர்களிடம் 15 03 89 தொடக்கம் செலுத்துமாறு இச்சங்கத்தின் சார்பில் தாழ்மையாக கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் எமது திட்டத்திற்கு அமைய உதவிகள் பெற்று பயனடைந்த ஐம்பது வீதமான நெற்செய்கை, மிளகாய்ச் செய்கை விவசாயிகள் சகலரும் தாம்பெற்ற அறுவடையில் சிறுபகுதி ஆகிய ரூபா 100/-ஐ மேற்படிநிவாரணநிதிக்குச் செலுத்துமாறு கேட்கப்படுகின்றனர்.

இப்படியாக சேகரிக்கப்படும் சுழற்சி நிவாரண நிதி இம்மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீண்டும் உதவிகள்புரிய பயன்படுத்தப்படும் ம.து.ம.ச சுழற்சி நிவாரணம் பணம் அறவிடப்படும் இடங்களும், சேகரிக்கு உத்தியோகஸ்தர்களும் கீழே தரப்பட்டுள்ளன. இவர்களிடம் பணத்தைப் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும், இப்பற்றுச் சீட்டுக்களை அடுத்துவரும் காலபோகத்தில் உதவிகோரி விண்ணப்பிக்கும் போது குறிப்பிடத்தவறவேண்டாம்

நிலையங்களும் பணம் வசூலிக்கத் தகுதிபெற்றவர்களும்

1. பேசாலை வாழுவோதயக்கிளை வெற்றி நாயகி ஆலயம்— திரு. ஜேம்ஸ் பீரிஸ், ம.து.ம.ச. செயற்குழு உறுப்பினர், பேசாலை.

2. அடம்பன் ப.நோ.கூ. சங்கம் — திரு. என். தங்கராஜா முகாமையாளர், ப.நோ.கூ சங்கம், அடம்பன்.

3. ஆள்காட்டிவெளி கமநல சேவை நிலையம்- திரு. அலஸ், பயிர்ச்செய்கை உத்தியோகஸ்தர், ஆள்காட்டி வெளி

4. விடத்தல்தீவு கமநல சேவை நிலையம் ஜனாப். எஸ்.எம். சுக்கூர், விவசாயபோதனாசிரியர், விடத்தல்தீவு

5. கள்ளியடி கமநல சேவை நிலையம் இலுப்பைக்கடவை திரு. கே. கணேசன், விவசாயப் போதனாசிரியர் இலுப்பைக் கடவை.

6 உயிலங்குளம் கமநல சேவை நிலையம் திரு. எல். ஏ. பீரிஸ், விவசாய விஸ்தரிப்பு சேவையாளர் உயிலங்குளம்.

7. முருங்கன் கமநல சேவை நிலையம் - திரு. பி. அந்தோனிப்பிள்ளை, விவசாய போதனாசிரியர் முருங்கன்

8. நானாட்டான் கமநல சேவை நிலையம், -திரு. மரியான் வாஸ், விவசாய போதனாசிரியர் நானாட்டன்.

9. வங்காலை-திரு. எஸ். எஸ். பீரிஸ் மாஸ்ரர், ம.து.ம.ச. செயற்குழு உறுப்பினர்-வங்காலை.

10. பொற்கேணி கமநல சேவை நிலையம் ஜனாப் எச். எம். ஏ. நஷிர், பெருமபாக உத்தியோகஸ்தர், சிலாவத்துறை.

12. மடுத் தேவாலயம்- திரு. ஜோசப், கணக்கர் மடுத் தேவாலயம்.

13. மாந்தை கமநல சேவை நிலையம் திரு. எல். ஞானசேகரம், பயிர்ச்செய்கை உத்தியோகஸ்தர், மாந்தை.

14. பாலம்பிட்டி கமநல சேவை நிலையம் திருமதி எம். சறீப்றெமீடா, விவசாயவிஸ்தரிப்பு சேவையாளர், பாலம்பிட்டி.

15. இரணை இலுப்பைக்குளம் கமநல சேவை நிலையம் திரு. மோகன காந்தி ராஜா, பயிர்ச்செய்கை உத்தியோகஸதர், இ. இ. குளம்.

16. எருக்கலம்பிட்டி கமநல சேவை நிலையம் பி. ஏ. மாஹறா, காரியாலய லிகிதர், கமநல சேவை நிலையம் 5ம் கட்டை, எருக்கலம்பிட்டி.

17 ம.து.ம.ச. பிரதான காரியாலயம், மன்னார்- செல்வி. சாந்தி காஷ்மீர், ம.து.ம.ச. மன்னார்.

உங்கள் ஒத்துழைப்பிற்கு நன்றி.

திரு. சின்கிலேயர் பீற்றர்
செயலாளர், ம.து.ம.ச.

அ. சேவியர் குரூஸ்
தலைவர், ம. து.ம.ச.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
பதிவு இல: QB / 1001/58/81

# ம. து. ம. ச. வின் கல்வி உதவித் திட்டம்

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் 89 ஆம் கல்வி ஆண்டில் மாவட்டத்தில் எல்லைக்கிராமங்கள், பின்தங்கிய பகுதிகள் போன்றவற்றை தரிசித்து அவ்வூர் மக்களின் குறைகளையும் தேவைகளையும் கேட்டறிவதுடன் பாதிக்கப்பட்ட ஏழை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் சீருடைகள் போன்றவற்றை விநியோகிக்க திட்டம் தீட்டியிருந்தது.

இதற்கு கொழும்பு சிறுவர் பராமரிப்பு நிதியமும், யாழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகமும், எமக்கு பேருதவி புரிந்தன. "உங்களில் அநேகர் விவசாயிகளின் பிள்ளைகள், இவ்வாண்டு ஏற்பட்ட வரட்சியின் காரணமாக உங்கள் பெற்றோர் பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர். பிள்ளைகளாகிய உங்களின் கல்விக்கும் பாடசாலை உபகரணங்கள், சீருடை வாங்குவதற்கு வழி இல்லாது தவித்தனர். உங்களின் துயர் துடைக்க இன்று நேரடியாக உங்கள் கிராமங்கள், பாடசாலைகளுக்கு விஜயம் செய்து, பாதிக்கப்பட்ட மாணவ மாணவிகளுக்கு பாட உபகரணங்கள் சீருடைகள் போன்றவற்றை விநியோகிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

வரட்சியினால் குடிக்க நீர் இன்றியும், அதை சேகரித்து வைக்க பாத்திரம் இன்றியும் நீங்கள் இன்னலுறுவதை நாம் நேரடியாகக் கண்டோம். எம்மை வரவேற்ற பாடசாலை அதிபர்கள் முஸ்லிம், இந்து சகோதரர்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகுக." என ம. து ம. ச. சங்கத்தலைவரும் குரு முதல்வருமான வண. பிதா. அ. சேவியர் குரூஸ் அடிகளார் இந்து முஸ்லிம் கிராமங்களான இலுப்பைக்கடவை, பொற்கேணி, சிலாவத்துறை போன்ற பகுதிகளில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள், சீருடைகளை இப்பகுதி பாடசாலை அதிபர்கள் ஊடாக வழங்கி உரையாற்றுகையில் கூறினர்.

ம. து ம. ச. உறுப்பினர்கள் தலைவர், செயலாளர் தலைமையில் கடந்த 9 02. 89 இலுப்பைக்கடவை பகுதிகளிலும் 16. 03. 89 - 17. 03 89 போன்ற தினத்தில் பொற்கேணி சிலாவத்துறை போன்ற பகுதிகளிலுள்ள சகல பாடசாலைகளையும் தரிசித்து பாதிக்கப்பட்ட மாணவ மாணவிகளுக்கு மேற்படி உதவியை வழங்கினர். இவை கோவில் குளம், ஆத்திமோட்டை, கூரால், கள்ளியடி, இலுப்பைக்கடவை, வெள்ளாங்குளம், தேவன் பிட்டி, மருதமடு, பொற்கேணி, பண்டாரவெளி, வேப்பங்குளம், முகனி, தம்பன்னை சிங்கள பாடசாலை, சிலாவத்துறை, அரிப்பு, முள்ளிக்குளம், பாலைக்குழி, கரடிக்குழி, மறிச்சுக்கட்டி, கொண்டச்சி, கொன்றுபுடையால் போன்ற பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

குழுவில் பொற்கேணி சிலாவத்துறை பகுதி பங்குத்தந்தை வண. பிதா. ரி. நவரத்தினம் அடிகளாரும் மன்னார் மாவட்ட சி. பா. நிதிய தலைவர், திரு. ஸ்ரானலி ஜோசேப்பும் கன்னியாஸ்திரிகளும் அடங்கியிருந்தனர்.

இக்கல்வி உதவித்திட்டம் சம்பந்தமாக ம. து. ம. ச. செயலாளர் திரு. சின்கிலேயர் பீற்றர் கருத்து தெரிவிக்கையில் "மன்னார்மாவட்டம் கல்வியில் பின் தங்கியுள்ளதையும், கடந்த 5 ஆண்டுகள் இனக்கலவரத்தினால் மாணவர்களின் கல்வி பாதிப்பு ஏற்பட்டதையும் கருத்தில் கொண்டு இச்சங்கம் கல்வி மேம்பாட்டிற்காக வருடா வருடம் பெரும் தொகையை செலவு செய்து வருகின்றது."

# நானாட்டானில் ஞானொடுக்கம்

நானாட்டான் பங்கில் பணி புரியும் மறையாசிரியர்கள், திருவழிபாட்டுக் குழுவினர் களுக்கான மாதாந்தத்தியானம் 21 03-89 அன்று அருள் திரு. போல் நட்சத்திரம் அடிகளாரின் தலைமையின் கீழ் நடைபெற்றது. அவர்தமது உரையின்போது மறையாசிரியர்களாக அழைக்கப்பட்ட நாம் கிறிஸ்துவின் சாட்சிகளாக விளங்க வேண்டுமெனவும், கிறிஸ்துவின் செபத்தை மேற்கோள்காட்டி செபவாழ்வின் முக்கியத்துவத்தை எடுத்தியம்பினர்.

அன்றையத்தினம் சிறப்புரை வழங்கிய வங்காலைப் பங்குத் தந்தை அருள்திரு. அருள்நாதன் அ. ம. தி. அடிகளார் ஒரு கிறிஸ்தவனுக வாழ்வதற்கு தியானம், செபம், நோன்பு, நற்செய்தி வாசனை என்பன மிக முக்கியமானவை என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்தார். பங்குத்தந்தையின் நன்றித் திருப்பலியுடன் அன்றைய ஞானொடுக்கம் நிறைவுற்றது.

வழிபாட்டுக் குழு
ஞா. மாலா
நானாட்டான்

# வத்திக்கான் நியமித்த ஆயரின் இடர்ப்பாடு

சீனாவிலுள்ள ஹெபேய் மாநிலத்திலுள்ள என்னும் மறைமாவட்ட ஆயரான பீட்டர் ஜோசவ் வான் சுவெயான் கடந்த சில மாதங்களில் பல நீண்ட பயணங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது என ஹொங்கொங்கிலிருந்து வந்த செய்தியொன்று கூறுகிறது.

82 வயதான இந்த ஆயரை விசுவாசிகளிடமிருந்து பிரிப்பதற்காகவும் அவரது உடல் நலத்தைக் கெடுப்பதற்காகவுமே அரசாங்கம் இந்நடவடிக்கையை எடுக்கிறது என்றும் சொல்லப்படுகின்றது.

1951-ல் பாப்பு 12ம்- பத்திநாதரால் நியமிக்கப்பட்ட ஆயர் வான் இருமுறை சிறைவாசம் அனுபவித்துள்ளார். முதலில் 1958 - 76 ஆண்டுகளில அவர் சிறையிலடைக்கப்பட்டார். மீண்டும் 83-ம ஆண்டில் இரகசியமாக குருக்களை திருநிலைப்படுத்துதல், வத்திக்கானோடு தொடர்புகள் வைத்திருத்தல், பிறநாட்டு பண உதவி பெறுதல் ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் அவருக்கு 10 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

தற்போது சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு காவலில் இருந்துவரும் அவர் பல்வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்று விசாரிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

தேசாபிமான சீனக் கத்தோலிக்க சங்கத்தின் ஓர் உறுப்பினரான அந்தோனி லியூ பய்னியன், ஆயர் வான் வைத்திய உதவிக்காக பிற இடங்களுக்குச் செல்வதாக சீனாவுக்கு சென்றிருந்த கத்தோலிக்க பத்திரிகையாளரிடம் கூறினர்.

# தலைவில்லுத்திருச்சேத்திர பங்குனித் திருவிழா

இலங்கையின் பிரசித்தி பெற்ற கத்தோலிக்க யாத்திரைத் தலங்களில் ஒன்றான கற்பிட்டிக்குடா நாட்டிலுள்ள தலைவில்லுப் புனித அன்னம்மாள் திருச் சேத்திர பங்குனித் திருவிழா கடந்த 10-ம் திகதி வெள்ளிக்கிழமை மிக விமரிசையாக நடந்தேறியது. லட்சக் கணக்கான மக்கள் என்றுமில்லாதவாறு கலந்து கொண்டனர். யாத்திரிகர் நலன் கருதி விசேட போக்குவரத்து, சுகாதார சேவை வசதிகள் செய்யப்பட்டிருந்தன. முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இத்திருவிழாவின் வெஸ்பஸ், திருநாள் பாடற் பலி ஆராதனைகளை பரிசுத்த பாப்பரசரின் விசேட பிரதிநிதியவர்களும் சிலாபம் மறைமாவட்ட ஆயர் பேரருள்திரு. பிராங் மாக்கஸ் ஆண்டகை அவர்களும் நடத்தி வைத்தனர். திருநாள் திருப்பலியின் போது பரிசுத்த பாப்பரசரின் விசேட பிரதிநிதியவர்கள் ஆங்கிலத்தில் மறையுரையாற்றினர். அவரது மறையுரையை சிலாப மறைமாவட்ட ஆயர் அவர்கள் சிங்களத்திலும், தமிழிலும் மொழிபெயர்த்தார். திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூபப் பவனி நடைபெற்றது.